மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: January, 1911.	No-1.
புத்தகம் - ௧௩.	சென்னப்பட்டணம்: ஜனவரி௴ 1911.	இலக்கம்-1.

பத்திராதிபர் துண்டு புஸ்தகம்.

காங்கிரஸ் மகா சபை.

டிசம்பர்மாதக் கடைசியில் காங்கிரஸ் மகாசபை, ஆசார சீர்திருத்த மகாசபை, பாரத மஹிளாமண்டலம், தொழிலாலோசனை சபை, மதுவிலக்குசங்கம், ஆஸ்திகவாதசபை, மகமதியசபை முதலியவைகள் அலஹாபாத்தில் கூடின. சர். வில்லியம் வெட்டர்போர்ன் என்ற கனவான் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குவந்து காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனம் வகித்து இதைச் செவ்வனே நடத்தியபின்பு, சில பிரமுகரும் தாமும்சேர்ந்து நமது வைசிராயைப்பார்த்துவிட்டு, பம்பாய், சென்னை முதலிய பட்டணங்களுக்கு வந்து, இங்குள்ள கனவான்கள் இவருக்கு நல்வரவு கூறியதற்கு தக்க பதிலளித்துவிட்டு, இலங்கை வழியாக தமது ஜன்மதேசத்திற்குச் சென்றார்.

ஆசார சீர் திருத்த சபை.

ஆசார சீர்திருத்தசபைக்கு ராஜாரம்பல்சிங் சபைத் தலைமையை வகித்து ஒருநீண்ட உபந்நியாசம் செய்தார். பெண்கல்வியின் விருத்தியை நோக்கி கல்வியிற் றேர்ந்த ஒவ்வொருவரும் அதிகப் பிரயத்தனம் செய்யவேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரும் தயைகூர்ந்து இவ்விஷயத்தில் இன்னுமதிக திரவியத்தைச் செலவு செய்யவேணுமென்றும் மிஸ்டர் சௌத்ரியின் மனைவியார் பிரேரேபித்தார்கள். அமதாபாத்திலுள்ள ராமாபாய் பிள்ளைகள் 20 - வயதாகிறவரையிலும், பெண்கள் 15 வயது ஆகிறவரையிலும் விவாகம் செய்யப்படக்கூடாதென்று தாய்தந்தையர்களை வற்புறுத்தவேண்டுமென்ற தீர்மானத்தை பிரேரேபித்தார்கள். கைம்பெண்களுக்கு கைத்தொழில் கற்பிக்கவும் அவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவும் அவர்களுக்கு ஒரு தனிமையான ஆசிரமம் ஒவ்வொரு இராஜதானியிலு மிருக்கவேண்டுமென்ற தீர்மானமும் முக்கியமானதே. இன்னும் சில தீர்மானங்கள் நடந்தபின் சபைகலைந்தது. மாதர்கள் சபை ஒன்று கூடியதில் விஜயநகரம் மகாராணியார் அதன் தலைமையை வகித்து பெண்கல்வியைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள்.

மாதர் சபை.

பாரதமஹிளா மண்டலத்திற்கு போபால் நாட்டுக்கு அரசியாராகிய பீகம் அவர்கள் சபைத்தலைமையை வகித்து நடத்தினார்கள். இதற்கு பலமாகாணங்களிலிருந்து 400 இந்

தியமாதர்கள் வந்திருந்தார்களென்பதைக் கேட்க மிக்க சந்தோஷிக்கிறோம். போபால் பீகம் எழுந்துபேச ஆரம்பித்தபோது சபையோர் பலத்தகரகோஷம் செய்து அப்பெருமாட்டி பேசியதைச் செவ்வனே கேட்டார்களாம். பின்பு அனேகமாதர்கள் பற்பல விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார்களாம். அடுத்த பத்திரிகையில் இச்சபையின் முழு விவரமும் எழுதப்படும்.

தொழிலாலோசனை சபை.

இச்சபையும் அலஹாபாத்தில் கூடிற்று. இதன் தலைமையை மிஸ்டர் ஆர். என் முதுல்கார் என்ற கனவான் வகித்தார். வெளிநாடுகளுக்கு நம்மவர்கள் சென்று புதிய கைத்தொழில்களைக் கற்று இங்கு வந்தவுடன் அவைகளை நடத்த சக்தியற்றவர்களா யிருப்பதற்கு பலகாரணங்களையும், இவர்கள் வெளிதேசங்களுக்குப் போகுமுன் இங்கு அவ்வித கைத்தொழில் சம்பந்தமான விஷயங்களைக்கற்றுக்கொண்டுபோகவேண்டுமென்றும், கைத்தொழில் விருத்தியடையவேண்டுமானால் யாவரும் ஒன்று கூடி கம்பனியாகச் செய்து கூட்டு வியாபாரம் செய்தல் நலமென்றும், இன்னும் கவர்ன்மெண்டாரும் இவ்விஷயமாக வேண்டிய நன்மைசெய்ய யோசித்துக்கொண் டிருக்கிறார்களென்றும் சொன்னார். சாமான்னிய கைத்தொழில்களாகிய தோல்பதனிடுதல், சாயம் போடுதல், சோப், நெருப்புக்குச்சி செய்தல், சர்க்கரை செய்தல் முதலியவைகளுக்கு ரூ-50,000முதற்கொண்டு 2-லக்ஷம் ரூபாவரையிலும்தான் தேவை. இவைகளை விருத்திசெய்ய 4 வருஷகாலமாய் நம்மவர்கள் முயன்று வருகிறார்கள். தனமுள்ளவர்கள் இவ்விதகைத்தொழிலை விருத்திசெய்ய முன்வரவேண்டும். தச்சன், கொல்லன், முதலிய வேலைசெய்பவர்கள் இயந்திரங்களைக் கொண்டு ஆயுதம் முதலியவைகளைச் செய்துகொண்டும், பற்பல விநோதப் பொருள்களையும் சீக்கிரத்தில் செய்தும் வரலாம். ஆனால் அவர்களுக்கு கல்வியின்மையால் அவ்வித இயந்திரங்களைப்பற்றி புகழ்வது கிடையாது. ஆகையால் அவ்வகுப்பார்களுக்கு இலவசமாக கல்விபோதித்து வரவேண்டுமென்றார். ஜப்பான் கைத்தொழிலில் விருத்தியடைந்திருப்பதற்கு காரணம் அங்கு 100-க்கு 95-பேருக்கு எழுதவும் வாசிக்கவும் தெரியும். இந்தியாவில் 100-க்கு 95-பேருக்கு எழுதவும் வாசிக்கவும் தெரியாது. இதுதான் கைத்தொழில் இங்கு விருத்தியடையாததற்கு முக்கியகாரணம்என்றார். இன்னும் பூமியிலிருந்து இரும்பு, அப்ரேக் முதலிய உலோகங்களை ஏராளமாக எடுக்கலாமென்றும்சொன்னார். இவர் பேச்சுமுடிந்தபின் பலதீர்மானங்கள் செய்யப்பட்டன.

மதுவிலக்கு சங்கம்

இச்சங்கமும் காங்கிரஸ் பந்தலில் கூடிற்று. இதற்கு பம்பாய் நகரத்து மிஸ்டர், F. W. ப்ரிட்சிலி கனவான் சபாநாயகராக வீற்றிருந்து இந்தியாவில் குடி அதிகரித்து வருகிறதென்றும் இங்கிலீஷ் சாராயத்தை அதிகமாக குடித்து வருகிறார்களென்றும், இதை நிறுத்த பத்திரிகை, துண்டு பத்திரம் முதலியவைகளை அச்சடித்து ஜனங்களுக்கு கொடுத்தும் புதுதி புகட்டியும் வரவேண்டு மென்றார். "இந்தியாவில் மிதமாய் குடித்துவர ஒரு சட்டம் அவசிய" மென்றும், பாடசாலைகளில் மதுவிலக்கைப்பற்றி போதிக்கவேண்டுமென்றும், இதை நிறுத்த தக்கவர்கள் நேரே சென்று உழைத்துவர வேண்டியதவசியமென்றும், சில கனவான்கள் பேசினார்கள். மிஸ்ஸஸ் டென்னிங் என்ற மாது மதுவிலக்கு விஷயத்தில் ஸ்திரீகளின் உதவி அவசியமென்பதைப்பற்றியும் பேசினார்கள்.

மைசூரில் பிள்ளைகள் சுருட்டு, சிகரேட் குடிக்கக் கூடாதென ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது போல் சென்னையிலும் சிறுவர்கள் அதாவது 16 வயதிற்குள்ளவர்கள் சுருட்டு சிகரெட் முதலியவைகளைக் குடிக்கக்கூடா தென்றும், அச்சிறுவர்களுக்கு கடைக்காரர்கள் விற்கக்கூடாதென்றும் ஒரு சட்டம் செய்தால் மிக நலமாயிருக்கும். இங்கிலாந்தில் இவ்விதச்சட்ட மிருக்கிறது. சென்னையில் இத்துர்வழக்கம் பரவிவருகிறது விசனிக்கத்தகுந்ததே.

நாகப்பூரில் மகமதியக்கல்வி கான்பரென்ஸ் கூடினது. மேலும் இவ்விடத்தில் எல்லா இந்தியா முஸ்லிம் லீகரும் (சபை) கூடிற்று. இதற்குத் தலைவர் மிஸ்டர் நாபியல்லா இதன் நோக்கங்களைப்பற்றி சிறந்த உபந்நியாசம் செய்தார். இது மகமதிய வகுப்பாருடைய உரிமைகளைக் காப்பதிலும், ராஜபக்தியை ஸ்திரப்படுத்துவதிலும், உழைக்குமென்றும், மற்றவகுப்பாருக்குப் பிரதிகூலமான எந்தவிஷயத்திலும் பிரவேசிக்காதென்றும் சொன்னது இந்துக்களிடத்தில் இத்தச்சபையார் நேசம்பாராட்டுவது திருப்தியை யுண்டாக்குகிறது.

மகமதிய சபை

கல்வி சம்பந்தமாக மகமதிய கனவான்கள் ஒரு சபை கூடினார்கள். ஒற்றுமையுடன் யாவரும் மனங்கலந்து பற்பல தீர்மானங்களைச் செய்தார்கள். பெண்கல்வி விஷயமாக சபைத்தலைமை வகித்த கனம் மிஸ்டர் பசில்பாய் என்பவர் ஒரு நீண்ட உபந்நியாசம்செய்தார். "ஞாபசக்தி பொருந்திய மாதர்கள் சத்திய சந்தர்களாயும், கௌரவ முள்ளவர்களாயும், பெருந்தன்மை, தர்மம், முதலிய நற்குண முடையவர்களா யிருந்தார்கள். இவர்களின் பேர் இன்னும் மகமதியவகுப்புக்கு திலகம்போல் விளங்கிவருகின்றது. போபால் நாட்டுபேகம் அவர்கள் தமது நாட்டிலுள்ள ஸ்திரிகளுக்கும் பெண்மணிகளுக்கும் கல்விபுகட்டியும் அவர்கள் ஸ்திதியை உயர்த்தியும் வருகிறது சந்தோஷகரமாயிருக்கிறது. ஸ்திரீகள் படிக்கவும் எழுதவும்மாத்திரம் தெரிந்துகொண்டால் போதாது. அவர்கள் குடும்பத்தைச் செவ்வனே நடத்தவும், பந்துக்களிடத்தில் பட்சமாயிருக்கவும், குழந்தைகளை நல்லவழியில் பழக்கிவரவும், கிரகத்தில் சந்தோஷமான திருப்தி குடிகொண்டிருக்கவும் தங்கள் கற்ற அறிவை உபயோகிக்கவேண்டும்" என்று சொல்லிமுடித்தார். போதனாமுறை பாடசாலையில் கற்கச்செல்லும் பெண்களுக்கு உபகாரச் சம்பள மளிக்கவேண்டுமென்ற தீர்மானம் செய்யப்பட்டது.

ஆஸ்திகவாதசபை அலஹாபாத்தில் கூடிற்று. இதற்கு பண்டிதர் சிவநாதசாஸ்திரி யவர்கள் தலைமையைவகித்து ஈசுவரபக்தி யாவருக்கும் அவசியமென்ற கருத்துள்ள ஒரு உபந்நியாசத்தைச் செய்தார். இவ்விஷயமாக பிரமசமாஜத்தைச் சேர்ந்த சிலரும் பேசினார்கள். சைவ சித்தாந்த சபை, ராமநாதபுரத்தில் கூடிற்று. இதற்கு மிஸ்டர் புட்டன செட்டியாரவர்கள் தலைமையை வகித்து இதன் நடவடிக்கைகளை நடத்தினர். ஸ்ரீமதி ஆண்டாள் அம்மாள் "திருபாசுரத்தைப்" பற்றி நமது ஆனிபெசன்ட் அம்மாள எவ்விதம் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்கிறார்களோ அவ்விதம் தமிழில் செய்தார்களாம். யாவரும் இம்மாதின் உபந்நியாசத்தைக் கேட்டு ஆச்சரியத்துடன் மகிழ்ந்தார்களாம். இம்மாது ஆர்காட் காலஞ்சென்ற தர்மரத்னாகரம் நாராயணசுவாமி முதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், சுயநயம்பா

மதசம்பந்தமான கூட்டங்கள்.

ராட்டாது தைரியமாக புருடர்களுக்குமுன் பிரசங்கம் செய்யவந்தது மிகவும் மெச்சத் தகுந்ததென்றும் சபைத்தலைவர்சொன்னார். இதைப்போலவே இப்பொழுது ஸ்மார்த்தர்கள் அத்வைத சபையும், வைஷ்ணவர்கள் விசிஷ்டாத்வைதசபையையும், மாத்வர்கள் த்வைதசபையையும் செவ்வனே கூட்டிவருகிறார்கள். கிருஸ்தவர்களும் தங்கள் சபையை நன்றாக கூட்டிவருகிறார்கள். தியசாபிகல் சங்கத்தாரும் வருஷாவருஷம் சபையைக்கூட்டி வருகிறார்கள். இதன்கூட்டம் சென்னையில் இவ்வருஷம் கூடிற்று. அச்சமயம் அனிபெசன்ட் அம்மாளும் சில கனவான்களும் சிறந்த உபந்நியாசம் செய்தார்கள். மதப்பற்று, தெய்வபக்தி, யிருந்தால்தான் தர்மசிந்தை, நல்ல எண்ணம், பரோபகாரசிந்தை, சுயநயமின்மை முதலியவைகள் உதிக்கும். நற்குணம் யாவருக்கும் வேண்டுமானால் தெய்வபக்தி அவசியம்வேண்டும். இந்தியாவோ தெய்வபக்திக்கும், ராஜ விசுவாசத்திற்கும் பேர்பெற்றது. அநேக புண்ணிய மகாத்மாக்கள் இந்தியாவில் முதிர்ந்த தெய்வபக்தியும், தெய்வ ஞானமுடையவர்களா யிருக்கிறார்கள். இவ்வித சபைகளால் நன்மை பயக்கு மென்றே நம்புகிறோம். நமது சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் நற்குணமும், தெய்வபக்தியும் உண்டாவதற்கு இவைகள் பெரிய சாதனங்கள் என்போம்.

தென்னிந்தியா உபாத்தியாய சபை.

இச்சபை திருவல்லிக்கேணி இந்து ஐஸ்கூலில் கூடிற்று. உபாத்தியாயர்களுக்கு வேண்டியவைகள் இங்கு பேசப்பட்டன. உபாத்தியாயர்களுக்கு ப்ராவிடண்டு பண்டு என்ற விஷயமும், மாடல் ஸ்கூல் என்ற விஷயம், தாழ்ந்த சாதியாருக்குக் கல்வி, நீதிமார்க்க போதனை என்ற பற்பல விஷயங்களைப் பற்றி உபந்நியாசம் செய்து தீர்மானங்கள் செய்தார்கள். ப்ரதமக்கல்வி சென்னையில் விருத்தியடைய ம-ா-ா-ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹராஐயரவர்கள் பெரும் முயற்சி செய்து வருகிறார்கள். இது கைகூடுமென்று நம்புகிறோம். இவ்விதக் கல்வி தக்க சிறந்த உபாத்தியாயர்களால் ஏழைகளுக்கு போதிக்கப்பட்டு வந்தால் மிக லாபகரமாயிருக்கும். நம்மவர்களும் நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் தக்க திரவிய சகாயம் செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

சென்னை பீப்பில்ஸ்பார்க்கும் வேடிக்கையும்

சென்னைக்கு இவ்வருடம் ஜனங்கள் அதிகமாக வெளி நாடுகளிலிருந்து வந்தார்கள். பீபில்ஸ்பார்க்கு வேடிக்கைக்குப் பணம்கொடுத்து அங்குள்ள வேடிக்கைகளைப் பார்த்தும் வந்தார்கள். நமது ஜனங்கள் வீணாக இவ்விததமாஷில் பணத்தை விரயம்செய்துவருதைப் பார்க்க மிக விசனப்படுகிறோம். நற்காரியங்களில் திரவியமுள்ளவர்கள் தங்கள் திரவியத்தைச் செலவிட்டால் எவ்வளவு மேன்மையா யிருக்கும் என்பதைச் சிறிதும் யோசிப்பதேயில்லையே!

எப்பொழுது இவ்வித வீண்செலவை ஒழிக்க நம்மவர்களுக்கு நற்புத்தி வருமோ தெரியவில்லை. ஆனல் இதை நிறுத்திவிட்டால் நலமென்று சிலவருஷங்களுக்கு முன் சில கனவான்கள் முயன்று வந்தும் பிரயோசனப்படாமற் போயிற்று. ஏழைகளுக்கு கல்வி, வைத்திய சிகிச்சை, ஸ்திரீகளுக்கு கல்வி முதலியவைகளில் திரவியம் செலவுசெய்தால் சிறந்த தர்மம்ஆகாதா?

கமலாலயம்.

ஞானம்பிகை:— "அன்னைமீர்! போனசபையில் தீர்மானித்தபடி இன்று நம்முன் படிப்பதற்கு ஒரு சிறு கதை தயார்செய்து இருக்கிறேன். அதைத் தொடங்குவதற்கு முன் தயவுசெய்து நீங்கள் எல்லாரும் சந்தனம், புஷ்பம் இவைகளை எடுத்துக் கொள்வதுடன் தாம்பூலமும் தரித்துக் கொள்ளக் கோருகிறேன்." இரண்டு மூன்று தட்டங்களில் தாம்பூலம், புஷ்பம் முதலியவற்றை எடுத்து வைக்கின்றாள்! அதற்குள் லக்ஷ்மி அம்மாளுடைய குழந்தை வெற்றிலைகளைக் கலைக்கப் போகிறான். ருக்மணி அம்மாள் வேண்டாம் என்று தடுக்கவே, குழந்தை அழ ஆரம்பித்தான். உடனே ஞானம்பாள் அவனை எடுத்துக்கொண்டுபோய் அவன் கையில் ஒரு பெரிய கற்கண்டு கட்டியைக் கொடுத்து எடுத்து வந்தாள்.

மீனம்பாள்:— "என் அம்மா ஞானம்! கதையைப்படி கேட்போம்! எல்லாரும் தாம்பூலம் போட்டுக் கொண்டாயிற்று; போட்டுக் கொண்டே கேட்கிறோம்" என, ஞானம் படிக்க ஆரம்பித்தாள்.

அகிலாண்டநாயகி:— "குழந்தாய்! இப்படி நடுவில் உட்கார்ந்து படி. நன்றாய்க் கேட்கிறேன் கதையை" என்றுசொல்ல, ஞானம் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து காகிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

ஞானம்பாள்:—"தேவிமார்களே! இப்பொழுது நான் படிக்கப்போகும் கதை ஆங்கிலேய சரித்திரத்திலிருந்து எடுத்து இருக்கிறது. நான் சிறு பெண்ணாயிருக்கையில் எனக்காக எனது உபாத்தியாயர் இங்கிலீஷிலிருந்து தமிழில் எழுதிக்கொடுத்ததாகச் சொன்னார். இக்கதை எனக்கு அக்காலம் முதற்கொண்டே அதிக இன்பத்தைக் கொடுத்தது பற்றி உங்களுக்கும் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று இதைப்படிக்க ஆரம்பித்தேன்."

ஆல்பிரெட் அரசன்.

சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் 'ஆல்பிரெட்' என்னும் ஓர் அரசன் அரசுபுரிந்துவந்தான். அவன் மஹா நல்லவன். நிரம்பப் படித்தவன்; தெய்வபக்தி மிகுந்தவன். எப்பொழுதும் நல்லமனிதர்களோடேயே சிநேகம் செய்துவந்தான். பலதேசங்களில் யாத்திரைசெய்து அவ்விடத்து நாகரீகங்களையெல்லாம் அறிந்து இங்கிலாந்து தேசத்தில் அவற்றையெல்லாம் நிலைநாட்டினான். அவனுடைய நற்குணத்தையும், ஜன விசுவாசத்தையும், தைரியத்தையும், தயாளகுணத்தையும், புத்தி விசாலத்தையும் விளக்கப் பலகதைகள் சொல்வதுண்டு. அவற்றில் ஒன்று நான் சொல்லப்போவது. ஒருமனிதனுக்கு ஒருகேடுவிளைந்தால், தனக்கே உண்டான கெடுதிபோல் எண்ணி அதைநீக்குவான். ஆனதுபற்றி, அவன் இங்கிலாந்து ஜனங்களாகிய பசுக்களுக்கு 'கோபாலன்' என்றும், 'சர்வஜனரக்ஷகன்' என்றும் பலவிதமான பெயர்களைவைத்து அழைப்பார்கள். அவர் காலத்திற்குமுன், இங்கிலாந்தில் இப்பொழுது போன்று அதிக கப்பல்கள் இருக்கவில்லை. சமுத்திரத்து வழியாய் எதிரிகள்வரின் அவர்களை எதிர்க்க ஜனங்களுக்கு வழியொன்

றும் இல்லாமல் இருந்தது. இவர்கள் குறையை அறிந்துகொண்டு டேன்ஸ் [illegible]னும் கொள்ளைக்காரர்கள் அடிக்கடி இங்கிலாந்துக்கு வந்து கொள்ளையடிக்கத் தொடங்கினர்.

இங்கிலாந்துக்கப்பால் கிழக்குப்பக்கத்தில் டேன்ஸ் சாதியாரின் தேசம். இரண்டு தேசத்துக்கும் நடுவில் சமுத்திரம். டேன்ஸ் ஜாதியாரிடம் வெகு வேகமாய்ப் போகக்கூடிய பலபடகுகள் இருந்தன. அவைகளுடன் அவர்கள் கூட்டங் கூட்டமாய்ப் புறப்படுவது வழக்கம். துறை முகத்தில் வந்து இறங்கினால் போதும். உடனே பட்டணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு முன்போலவே, விரைவாய்ப் படகில் ஏறிப்போய் விடுவார்கள். ஆங்கிலேயர் என்செய்யக்கூடும்? அவர்களைத் தொடர்ந்துபோகவோ இவர்களிடத்தில் தக்க படகுகளாவது கப்பல்களாவது இல்லை. டேன்ஸ் ஜாதியாரோ மஹா சாமர்த்திய முள்ளவர்கள். சமுத்திரத்தில் மட்டு மன்று; மற்ற நதிகளில் ஆகட்டும், நதியின் முகத்துவாரத்தில் ஆகட்டும், எவ்விடத்திலும், தங்கள் படகுகளில் நின்றுகொண்டு சண்டை செய்யவேண்டி இருந்தாலும் சரி, நிலத்தில நின்று சண்டை பிடிப்பினுஞ்சரி, ஒன்றுக்கும் பின்வாங்கமாட்டார்கள்.

இவ்வளவு சாமர்த்தியத்துடனும் டேன்ஸ் அதிகக்கொடியவர்கள். ஒரு ஊரைக்கொள்ளை அடிப்பது என்றால், முதலில் அவ்விடத்தில் இறங்கி ஊருக்கே நெருப்புவைத்து விடுவார்கள். ஜனங்கள் பயந்து ஓடும்போது புருஷர்கள் என்றும், பெண்கள் என்றும், குழந்தைகள் என்றும் சிறிதும் பாராமல், ஒருங்கே எல்லாரையும் கொன்று விடுவார்கள். கோவில்களே யென்றும், மடங்களே யென்றும், கொஞ்சமாகிலும் அஞ்சமாட்டார்கள். எல்லாவற்றையும் ஒரேயடியாய்க் கொள்ளை கொண்டுபோய் விடுவார்கள். ஒரு இடத்திலிருந்து கிளம்பினால் இன்னொரு இடத்தில் போய் இறங்க வேண்டியது தான். இவ்விதமாக இங்கிலாந்து சுமார் இருநூறு வருஷகாலமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. குழந்தைப் பருவம் முதற்கொண்டே டேன்ஸுகளைப் பற்றியும், அவர்களின் கொடுமைகளைப் பற்றியும், அடிக்கடி கேள்விப்பட்டிருப்பதும் அன்றி, பலதடவைகளில் அவர்களுடன் சண்டையும் செய்து இருக்கிறான். கடைசியாக, ஆல்பிரட் அரசனானதும், டேன்ஸுகளின் தொந்திரவு முன்னிலும் அதிகமாயிற்று. அரசனானமுதல் ஏழுவருஷகாலம் டேன்ஸுக்கும் ஆங்கில நாட்டுக்கும் சண்டையாகவே இருந்தது. சில சமயங்களில் ஆல்பிரட் ஜயமடைவான். சில சமயங்களில் டேன்சு ஜயிப்பார்கள். கடைசியில் 878-ம் வருஷத்தில் ஆல்பிரட் முற்றிலும் தோற்றுப் போய்விட்டான். டேன்சு அவன் தேசத்தைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். என் செய்வான் ஆல்பிரட்? தன் சக்திக்கு ஆனமட்டும் முயன்றும் அவர்களை அசைக்க முடியவில்லை. தேசத்தை விட்டு ஓடவேண்டி வந்தது ஆலப்ரெட்டுக்கு!! ஜனங்கள் துணையில்லாமல் அநாதிபோன்று காடுகாடாய் சுற்றினான்.

ருக்மணி:—என்ன கஷ்டம்?

கமலாபாய்:—விதி யாரை விட்டது! வருவதையெல்லாம் அநுபவிக்க வேண்டியது தானே!

மீனும்பாள்:—இவ்வளவுக்கும் ஆல்ப்ரெட் எவ்வளவு நல்லவன்; தன் ...களைத் தன் கண்போல் பார்த்து வந்தானே! என்ன அனியாயம்!

அகிலாண்டநாயகி:—நல்லவர்களுக்குத் தான் கஷ்டம் வந்து சம்பவிக்கிறது. கொள்ளையடிக்கிறதாயிருந்தால் கொள்ளை யடித்துக் கொண்டு போகாமல், தேசத்தைப் பிடித்துக்கொண்டு ஜனங்களை வதைக்க வேண்டுமா?

ஞானம்பாள்:—அதைத் தான் நாம் நன்ருய் அறியவேண்டும். கொள்ளையடித்துக்கொண்டே யிருந்து கடைசியாய்க் கொஞ்சங்கொஞ்சமாய் இங்கிலாந்திலேயே இருக்க ஆரம்பித்து விட்டனர் டேன்ஸ். சமுத்திரக்கரை ஓரமெல்லாம் அவர்கள் வியாபித்து விட்டார்கள்.

ருக்மணி:—எப்படியோ போகட்டும்! நம்ம ஆல்ப்ரெட் ராஜாவுக்கு என்ன கஷ்டம் நேரிட்டதோ பார்ப்போம்.

அகிலாண்டநாயகி:—ஞானம்! படி அம்மா மேலே!

ஞானம்பாள் படிக்கிருள்:—

"ஜனசஞ்சாரம் விசேஷமாய் இல்லாத காடுகளில் அனுதியாய்த் திரியும் அரசன் பசியாலும் களைப்பாலும் வருந்தி காட்டில் தனியாய் இருக்கும் ஒரு குடிசையைக் கண்டான். குடிசையைச் சுற்றிலும் அமைதியாயும் ஜனங்களின் தொந்தரவு இல்லாமலும் இருந்தது. அருகில் ஒரு நதி ஓடிக்கொண்டிருந்தது. கரையோரமெல்லாம் அழகிய நாணற் புதர்கள் நிரம்பியிருந்தன. இவ்வியற்கை அழகைப் பார்த்து ஆல்பிரட் 'ஆகா! ஆகா!! இவ்விடம் குடியிருப்பவர்கள் என்ன பாக்கியம் பெற்றவர்களோ? தேவலோகம்போலவும் 'ஈடன் தோப்பு'ப் போலவும் இருக்கிறதே! கொடும்புலிகளான டேன்ஸ் இவ்விடம் வரவில்லையென்பது விளங்குகின்றது. ஆகையால் நானும் இவ்விடத்தில் அவர்கள் தொந்தரவு இல்லாமல் க்ஷேமமாயிருக்கலாம்! என்று எண்ணுகிறேன்.——ஆனல் இவ்விடத்தில் யாராவது, குடியிருக்கிருர்களோ என்பது சந்தேகமாய் இருக்கின்றது. டேன்ஸுகளின் தொந்தரவு இல்லாவிட்டாலும் பசியால் இறக்கவேண்டிவருமே! ஈசா! மனிதனுக்குத்தான் எவ்வளவு கஷ்டங்கள்!!"—அதற்குள் குடிசையினின்றும் புகை வருவது மரங்களுக்கிடையில் தெரிகின்றது. அவ்விடம்போகிருன் ஆல்பிரட்.

குடிசைக்கெதிரே ஒருகுடியானவன் நிற்பதைக் கண்டான். அவனிடம் அரசன் சென்று "ஐயா, ஒரு பரதேசியாகிய எனக்கு அன்புடன் தயவு செய்து சற்று உணவளிக்க வேண்டும்!" என்ருன். அதற்குக் குடியானவன் "பரதேசியா? இப்பொழுது பரதேசிகளுக்கு என்ன குறைவு! இவ்வழியாய் வரும் ஒவ்வொரு பரதேசிக்கும் சாப்பாடு போடுகிறதென்று வைத்துக்கொண்டால் நாங்கள் கையில் சட்டி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்!! ஆனுலும் பார்ப்போம்; உள்ளே என் மனைவியிடம் செல்வோம்; சென்று ஏதாவது கிடைக்குமோ வென்று பார்ப்போம்." என்று ஆல்பிரட்டை தன் மனைவியிடம் இட்டுக்கொண்டு போனுன்.

"காண்டலீன்! எனக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது; விடிந்தது முதல் இதுவரையில் விறகு பிளந்தாய்விட்டது; பசியோ—" என்பதற்குள், அவன் மனைவி (காண்டலீன்) "ஆமாம், ஐயா! உமக்குப் பசிக்கிறது, சாப்பாட்டுக்குத் தயாராயிருக்கிறீர்! ஆனால் சாப்பாடோ உங்களுக்குத் தயாரா யிருக்கமாட்டே னென்கிறதே! சாதம் ஆக இன்னும் இரண்டு நாழிகைபிடிக்கும்; என்ன இன்னும் அஸ்தமிக்கக்கூட இல்லையே; மஞ்சள் வெயில் இன்னும் தெரிகின்றது, இதற்குள் என்ன அவசரம்—இது யார் உமது பக்கத்தில் நிற்பது!" என்று கேட்க, ஆல்பிரட் "தாயே, நான் அயலூர், இன்று இருக்க இடமும் உண்ண உணவும் வேண்டுகிறேன்; தயவு செய்து கொடுக்கவேண்டும்" என்றான்.

காண்டலீன்:—அசலூரா! அசலூர்க்காரர்களைக்கண்டால் எனக்குப்பிடிக்கிறதில்லை. நமதுதேசத்தாரும் அசலூர் ஜனங்களை உபசரிக்க நியாயம் இல்லையென்று தோன்றுகிறது; அசலூர் ஜனங்கள் இங்கிலாந்துக்கு வர ஆரம்பித்த நாள்முதல் பிடித்தது சனியன் தேசத்துக்கே ஒரே அடியாய்! சுகம் என்பதே ஜனங்களுக்கு எள்ளளவும் இல்லாமல் போய்விட்டது! என்ன அநியாயம்?"

ஆல்பிரட்:—"அம்மணீ, நான் இங்கிலாந்து தேசத்துக்கே அன்னியன் என்று நீங்கள் எண்ணக்கூடாது. இந்தப் பக்கத்துக்கு புதிதே தவிர, நான் உண்மையான ஆங்கிலேயன். இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்தவன்."

குடியானவன்:—"ஐயா, இந்த டேன்ஸ் நாய்களை நீர் மனதார வெறுக்கின்றீரா? நம்ம ரத்தத்தையே உறிஞ்சிவிடுகிறார்களே கொடும்பாவிகள்! வீட்டைக் கொள்ளையடிப்பதும், குடிசையைப் பிடுங்குவதும், தீ வைப்பதும்,—ஓ தெய்வமே! கஷ்டம்! கஷ்டம்!—

ஆல்பிரட் (அதிக வருத்தத்துடன்):—"என் மனதார நான் அவர்களை வெறுப்பதும் அன்றி, நமது 'அமிர்த பூமியாகிய இங்கிலாந்தைவிட்டு இக் கொடும் பாவிகள் தொலையவேண்டுமென்று தினமும் ஸ்வாமியை வேண்டுகிறேன்."

குடியானவன்:—ஐயா, நீர் யோக்கியர் என்று எனக்குத்தோன்றுகிறது. நண்பரே, உம்மைக் கண்டு எனக்கு ரொம்ப சந்தோஷம்."

ஆல்பிரட் (கொஞ்சம் தைரியமாய்):—"நான் ஆல்பிரெட் அரசன் பக்கத்தில் நின்றுகொண்டு டென்ஸனுடன் கடைசி யுத்தத்தில் கூட சண்டைப் பிடித்தேன்."

காண்டலீன்:—"என்ன! ஐயா, சொன்னீர்?

ஆல்பிரட்டா! ஆ! நமது அரசன் ஆல்பிரட் பக்கத்தில் நின்று நீர் யுத்தம் செய்தீரா என்ன? நம்மரசன் பலகாலம் வாழ்கவேண்டும்!!"

குடியானவன்:—"அப்படியானால் நமது அரசன் எங்கிருக்கிறார் என்பது உமக்குத்தெரியுமா? என்ன ஸ்திதியில் இருக்கிறார் என்பதை ஒருவரும் சொல்வார் இல்லையே!"

ஆல்பிரட்:—"அரசன்மேல் உமக்கு அதிக பிரியம்போலிருக்கிறது!"

குடியானவன்:—"அதற்கென்ன ஆக்ஷேபணை! என்போன்ற ஏழைகள் எவ்வளவு அன்புடன் அரசனை நேசிக்கக்கூடுமோ அவ்வளவு அன்புடனும் பக்தியுடனும் அவரை நாங்கள் நேசிக்கிறோம். அவர் எங்கள் உயிர்க்கு உயிராயிருக்கின்றார் அல்லவா! தினமும் அவருக்கு ஜயம் உண்டாக வேண்டும் என்று மன உருக்கத்துடன் கடவுளை வேண்டுகிறோம். அப்படியும் அவருக்கு ஜயம் உண்டாகவில்லையே! எங்கள் கஷ்டத்தையார் நீக்கப் போகிறார்கள்!! ஐயா, உமக்கு அரசனைப்பற்றி ஏதாகிலும் தெரிந்தால் சொல்லுமே கேட்போம்."

ஆல்பிரட்:—"நம்மரசர் இறந்து விட்டார் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நிச்சயமாய் ஒன்றும் தெரியவில்லை."

குடியானவன்:—"நண்பரே என்னகஷ்டம் நமது அருமை இங்கிலாந்து தேசத்துக்கு! நமதரசன் இறந்துபோய் விட்டாரா" என்று இவ்விதமாக எல்லோரும் விசனப்பட்டுக் கடைசியாகக் குடியானவன் ஆல்பிரட்டைத் தன் வீட்டிலேயே தங்கும்படி கேட்டுக்கொண்டான்.

ஆல்பிரட்டுக்கோ அவ்வேழைக் குடிகளைத் தொந்தரவு செய்வதில் சற்றும் பிரியமில்லை. எவ்விதத்திலாவது அவர்களுக்கு உபகாரமாயிருந்து அவர்களை திருப்திசெய்து அவர்கள உணவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எண்ணினான். ஆனால் எவ்விதத்தில் உபகாரம் செய்யக்கூடும்? விறகு பிளக்கச் சக்தியுண்டா? அல்லது பிளந்தவற்றைக் கட்டித் தூக்கிவர முடியுமா? ஓலைமேயத் தெரியுமா? கூடை முடையத் தெரியுமா? இப்பொழுது என்ன நிலைமையிலிருப்பினும் அரசன் அரசன்தானே! என்றைக்காகிலும் கஷ்டப்பட்டு வேலை செய்திருந்தால்தானே தெரியும். ஆகையால் ஒருவழியிலும் அவர்களுக்கு உபகாரமாயிருக்க முடியவில்லை. இவன் வேலைசெய்ய சக்தியற்றவன் என்று அவர்கள் கண்டு ஏதோ வீட்டில் மேஜையையாவது துடைத்து வைப்பான் அல்லவா? அவ்வுபகாரமே போதும் என்று எண்ணினார்கள்.

இதற்குள் பால் கறந்துவர வேண்டியிருந்தது. காண்டலீன புறப்பட்டுப் போகும்போது "ஐயா, இந்த தோசைகள் தீய்ந்து போகாமல்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும். நான் ஒரு நொடியில் பால்கறந்து வருகிறேன்" என்று சொல்லிப்போனாள். குடியானவனும் சாப்பாடு தயார் ஆவதற்குள் சும்மாவிருக்க விரும்பாமல் விறகுகளை எடுத்து அடுக்கப்போய்விட்டான். காண்டலீன் போகும்போது மறுபடியும் ஒருமுறை "நண்பரே தோசை ஜாக்கிரதை ஓரேபுறமாய் இருந்தால் தீய்ந்துபோய்விடும். ஆதற்காக அடிக்கடி திருப்பிப்போட்டுக் கொண்டிருக்கவேண்டும்" என்று சொல்லிப்போனாள்.

ஆல்பிரட்:—"அன்னையே, நீங்கள் சொல்லுகிறபடியே பார்த்துக்கொள்ளுகிறேன். மறப்பதில்லை" என்றான்.

குடியானவனும் அவன் மனைவியும் வீட்டைவிட்டுப் போய்விடவே, ஆல்பிரட் தன் நிலைமையையும் மறந்து, தான் பார்த்துக்கொள்ள வேண்டிய

தோசையையும் மறந்து தன் இருப்பிடத்தையும் மறந்து, பொறுக்க முடியாத கஷ்டத்தில் முழுகினவனாய்—இங்கிலாந்தின் கதியையும், ஆங்கிலேயர் படும் கஷ்டத்தையும், அவர்களுடைய நிலை குலைந்த வாழ்வையும், எண்ணி எண்ணி, மனம் ஆற்றாது, துக்கம் நெஞ்சை அடைக்க, கண்களில் நீர் தாரை தாரையாய் வழிய—“கடவுளே, என் கஷ்டம் எவ்வளவு இருப்பினும் என்னால் பொறுத்துக்கொள்ளக்கூடும்! ஐயோ இங்கிலாந்து கிழிபட்டு ரத்தம் ஆறாய் ஓடுகின்றதே; என் வீரர்கள் எவ்வளவுபேர் இதுவரையில் இறந்துவிட்டனர்! குடிகளில் எத்தனைபேர் டென்ஸினால் கொலையுண்டார்கள்; எத்தனை ஊர்கள் எரிந்துபோய்விட்டன; எவ்வளவு ஜனங்கள் என்னைப்போன்று உடுக்க உடையும் படுக்கப்பாயுமின்றி பலரிடத்திலும் இடிபட்டு தவிக்கின்றனர்!! என்னையல்லவா கடவுள் இவர்களுக்கு ரக்ஷகனாக ஏற்படுத்தியிருக்கிறார்; ஒரு எள் அளவு உபகாரம் கூட என் அருமை ஜனங்களுக்கு நான் செய்ய சக்தியற்றவனாயிருக்கின்றேனே! என்ன பாவம்செய்தேன்! கழுகுகள் போலவும், வேட்டை நாய்கள் போலவும், கொடும்புலிகள் போலவும், என் பிரஜைகளைச் சின்னாபின்னம் ஆக்குகின்றார்களே ராக்ஷஸர்களான டேன்ஸ்! நான் டேன்ஸை வென்று என்குடிகளை பரிபாலனம் செய்ய யோக்கியதை யற்றவனாகில், ஸ்வாமி இன்னும் ஒரு தக்கவீரனை அனுப்பியாகிலும் நாட்டை ரக்ஷிக்கக்கூடாதா! அவனாவது என்னைவிட சாமர்த்தியமாய் சண்டைசெய்து டேன்ஸை தேசத்தைவிட்டுத் துரத்தட்டும்”—என்று பலவாறு துக்கித்துக்கொண்டு விழித்தகண் விழித்தபடியே ஆழ்ந்தயோஜனையில் இருந்து விட்டான். இதற்குள் காண்டலீன் பால் கறந்துகொண்டு திரும்பி வந்துவிட்டாள். குடியானவனும் சற்று பின்னே வந்து கொண்டிருக்கிறான். காண்டலீனைப் பார்த்ததுதான் தாமதம்; அவள் கொடுத்தவேலை உடனே அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது; திரும்பினான் அடுப்பின் புறம்! ஒன்று கூட பாக்கியில்லாமல் எல்லாத்தோசைகளும் கரிந்துபோய்விட்டன.

☞ ஓர் தூதன்.

அசுத்தவாயுவும், அதனால் விளையுந் தீங்குகளும்.

தண்ணீரும் ஆகாரமுமில்லாதுபோனாலும் நாம் சொற்பநாட்களிற்குச் சீவிக்கலாம். காற்று இல்லாதுபோனால் சொற்ப நிமிஷங்களிற்குஞ் சீவிக்க முடியாது. அதிகமான ஜனங்கள் சமையல்செய்யும் பதார்த்தங்களிலும், ஏனங்களிலும், செலுத்துகிற அவ்வளவு கவனம், சுத்தவாயுவிற் செலுத்துகிறதில்லை. இதனாற்தான் தடிமல், சுரம், முதலிய வியாதிகள் அதிகமாகப் பாவுகின்றன. காற்றைச் சுத்தமாக்கக் கூடிய வழிவகைகளையும், அப்படியில்லாதிருத்தலினால் எவ்வளவு தீங்குகள் விளையுமென்பதைப் பற்றியும், நாமொவ்வொருவரும் விரிவாயறிந் திருத்தல்வேண்டும். குப்பை, அழுகிய பதார்த்தம், இறந்துபோன பூச்சி புழு, முதலியவைகளிலிருந்து ஓர்வித நச்சுகாற்று எழும்பி சுத்தமான காற்றுடன்சேர்ந்து கெடுதியை விளைவிக்கின்றது. வீட்டி

னும், கொல்லை, பூந்தோட்டம் முதலியவைகளினுமிருக்கும் குப்பைகளை ஒவ்வொருநாளும் வாரித்தூரத்திற் கொட்டிவிடல்வேண்டும்.

பிரதானமாகப் படுக்கையறைகளில் சாமான்கள் மிகவுஞ் சொற்பமாயும், காற்று லேசாய் உட்பிரவேசிக்கக்கூடியதாயும், சன்னல்கள் கதவுகளெல்லாம் திறந்து மிருத்தல்வேண்டும். இல்லாவிட்டால் சுவாசித்த காற்றையே மேலும் மேலும் சுவாசிக்க நேரிடும். ஒரு அழுக்குள்ள எனத்தைக் கழுவிய தண்ணீர் எவ்வளவு அசுத்தமாயிருக்கின்றதோ, அதுபோலவே நம்முடைய உடம்பிற்குட் பிரவேசித்து வெளியிலேவருங் காற்றுமிருக்கும் சிற்சில அறியாத்தன்மையுள்ள ஜனங்கள் படுக்கும்பொழுது தலையையும், உடம்பையும், சீலையினலே நன்றாயிறுக்கி மூடிக்கொண்டு, சுத்தவாயுவைச் சுவாசிக்க முடியாமல் மேலும் மேலு மதையே சுவாசிக்கின்றனர். இப்படிச் செய்வதனல் சில வேளைகளில் மரணம் வரவுங்கூடும். உதாரணமாக." அநேக வருஷங்களுக்கு முன் கல்கத்தாவிலே ஒரு நாளிரவில் 146-மனுஷரை இரண்டு சிறுவாசல்களையுடைய ஓர் சுரங்கத்தில் (Black hole) விட்டடைத்தார்கள். மறுநாட்காலை திறந்து பார்த்தபொழுது 23-மனுஷர் மாத்திரம் நடக்கவுமியலாத பக்குவமாய்த் தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்தார்கள். மிகுதியாயிருந்த அவ்வளவு பெயரும் அன்றிரவே யிறந்துபோனர்கள். இவர்கள் யாது காரணத்தினு லிறந்திருக்கக்கூடும்? அசுத்தவாயுவே இதற்குக் காரணம்.

பம்பாயில் பிளேக் வியாதி யதிகரித்தற்கு நியாயம் சன நெருக்கமே. தொற்று நோயிருக்கும் நாட்களில், பட்டணங்களில் அதாவது சன நெருக்கமான விடங்களிற் குடியிருப்பதிலும் பார்க்க, நகரியிலேயிருத்தல் விசேஷம். நகரிகளிலோவென்றால் ஒவ்வொரு வீட்டிற்கிடையில் அதிக விசாலமான கொல்லைகளிருக்கும். வீட்டின் சுற்றுப்புறங்களிலும் பூந்தோட்டங்களிலும் எல்லாவித செடிகளையும் உண்டுபண்ணப்படாது. அவைகளிற் சில மனிதருக்கு அசௌக்கியத்தை விளைவிக்கக்கூடும். எந்த நேரமும் வீட்டிற்குள்ளேயிருத்தலிலும் பார்க்கச் சாயங்காலங்களில் வெளிப்பக்கங்களில்போய் சுத்தவாயுவைச் சுவாசித்தல் மனுஷருக்கு மூளைக்குக் குளிர்ச்சியையும், உடம்பிற்கு சுகத்தையும், மனதிற்கு ஓர்வித சந்தோஷத்தையுங் கொடுக்கும்.

☞ எஸ். ராஜம்மாள்.

சர்வஜித்.

35-வது அத்தியாயம்.

ஸர்வஜித்தின் விஷயத்தில் தீங்கை விளைவிக்கக்கூடிய பற்பல சதியாலோசனைகளைச்செய்யும்படி பிரபு அநங்கனை எவினது யாதென்று நாம் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. பிரபு அநங்கன் சீமாட்டி லீலாவதியின் ரூபலாவண்யங்களால் மோகிதனுகி தகிக்கப்பட்டான்; அவன் தனது விருப்பத்தை எப்படிவாவது நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்று உறுதிகொண்

டான்: இதுவரையில் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்றபடி எப்படிப்பட்ட மனோரதத்தையும் நிறைவேற்றி வந்தமையால், சீமாட்டி லீலாவதியை மணம்புரியும் விஷயத்திலும விக்கினங்கள் எவைகள் ஏற்பட்டாலும் அவைகளையெல்லாம் முறியடித்து காரியவெற்றிகொள்ள வேண்டுமென்றே தீர்மானித்துக்கொண்டான். சுருக்கமாகச் சொல்லுமிடத்து "சீமாட்டி லீலாவதி எனது பத்தினியாகவேண்டும், அவளை யடைவதற்காக எந்த அநியாயஞ் செய்யவேண்டி யிருந்தாலும் அதைச் செய்து முடிப்பதில் அஞ்சுகிறதில்லை" என்று உறுதி செய்துகொண்டான்.

இவன் முதன் முதல் அமராபுரியில் பிரபு புஷ்யமித்திரரிடத்தில் தான் சீமாட்டி லீலாவதியை விவாகஞ்செய்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டபோது ஸர்வஜித்துக்கும் லீலாவதிக்கும் பரஸ்பரநேசம் உண்டென்பதை அறியாதவன். லீலாவதியை விவாகஞ்செய்து கொள்ளப்போகும் புருஷனாக ஒப்புக்கொள்ளப்பட்டு அமராபுரியிலிருந்து அனந்தகிரிக்கு வந்தபோதுங்கூட அவனுக்கு இவ்விஷயம் உடனே தெரியவில்லை. வந்து சேர்ந்த நாலைந்து தினங்களுக்குப் பிறகுதான் உள்ளவர்த்தமானத்தை பிரபு புஷ்யமித்திரர் மூலமாய் அறிந்துகொண்டான். இதைக் கேட்டவுடன் இவ் விவாக விஷயத்திலிருந்த அவனது அவா முன்னிருந்ததைக் காட்டிலும் பதின் மடங்குபெருகிற்று; இக்காரியத்தை முடித்தே தீருகிறதென்று தனக்குள் சபதஞ்செய்து கொண்டான். ஏனெனில், எங்கேயோகிடந்த ஊரும் பெயருந்தெரியாத ஒரு நீசன் தனக்குப் போட்டியாக ஏற்பட்டானென்பதை நினைக்க அவன் மனம் சகிக்கவில்லை. இக்காரியத்தில் தான் நடக்கிறது நடக்கட்டும் என்று சும்மாவிருப்பது தனது பிரபுத்தனத்திற்கு மகா இழிவாகுமென எண்ணினான்.

தவிரவும், ஸர்வஜித் லீலாவதியை சடையன் வீரன் ஆகிய இருவர் கைகளிலிருந்து விடுவித்தபோது, அப் பெண்மணி ஸர்வஜித்தின் சௌர்ய பராக்கிரமங்களைக்குறித்து மகா உற்சாகத்துடன் புகழ்ந்து பேசத்தவறவில்லை யென்பதை இதைப்படிப்பவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடும். அப்பொழுதுதான் அநங்கன் தான் எண்ணியிருந்ததைக் காட்டிலும் லீலாவதி ஸர்வஜித்திடத்தில் அதிகமாக நேசங்கொண்டிருந்தாளென்பதை நன்கு உணர்ந்தான். இவ்வுணர்ச்சியானது ஒருபக்கத்தில் தான் ஸர்வஜித்தின் மேற்கொண்ட அசூயையை பலப்படுத்திற்று; மற்றொரு பக்கமாக லீலாவதியை தனது மனைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்ற சங்கற்பத்தை பலமாய் ஊன்றச்செய்தது.

இக்காரணங்கள் பற்றியே தான் சில வாரங்களுக்கெல்லாம் ஸுரேந்திரனுடைய கொலையாளியென்று ஸர்வஜித் பிரபு புஷ்யமித்திரர் முதலியோரால் சந்தேகிக்கப்பட்டபோது பிரபு அநங்கன் அடங்காதகளிப்புற்றான். முதலில் ஸர்வஜித்தைத் தப்புவிக்கிறதாகச் சொல்லி லீலாவதி கைப்பட கடிதத்தை வாங்கி ஸர்வஜித்தை அனந்தகிரிக்குத் திரும்பி வாராதபடி துரத்திவிட எண்ணங்கொண்டான். ஆனால் அவனது துரதிர்ஷ்டம் பிள்ளையார் செய்யக்குரங்காய் முடிந்ததென்பதுபோல அவன் கருதினதொன்று நடந்ததொன்றாய்விட்டது. ஆனால் அநங்கன் மனத்தளர்ச்சியை யடையவில்லை. மறுபடியும் ஸர்வஜித் படுக்கையோடு படுக்கையாயிருந்தபோது பிரபு அநங்கன்

அவனை இரண்டாமுறை தூரத்த எத்தனித்தான்; முகவில் பயமுறுத்திப் பார்த்தான்; தன்காரியம் சாயவில்லை; பிறகு லீலாவதியின் நோக்கத்தைத் தெரிவிப்பதாகச் சொன்னான்; அதுவும் பயன்படவில்லை. இம்முறை ஸர்வஜித்தின் பிடிவாதம் தனது மனோபீஷ்டத்திற்கு இடையூறாகவிருந்தது. இதற்கு மேற்றான் ஸர்வஜித்தை எப்படியாகிலும் நசுக்கித்தொலைத்து விடுவதென்ற தீராப்பகைமையை கைக்கொண்டான். அப்பகைமை எவ்வளவு அபாண்டமான பொய்களைச் சொல்லும்படி அநங்கனையும் ஊழியக்காரனான வரதனையும் ஏவினதும், அப்பொய்களால் நிர்பாக்கியனான ஸர்வஜித் மரணதண்டனைக்குள்ளானானென்பதும் நாம் அறிந்த விஷயம்.

இவ்வளவு தூரம் அநங்கனது மனோபாவங்களை எடுத்துக்கூறி இனி மேற்கதையைச் சொல்லலாம்.

இப்பொழுது காலை மணி ஒன்பது; பிரபு அநங்கன் தனது படுக்கையறையிலிருந்து காலை போஜனஞ்செய்ய கீழே இறங்கிவந்தான். இராத்திரி நல்ல நித்திரையில்லை; சாதாரணமாகவே அவனுக்கு அனந்தகிரி வந்தது முதற்கொண்டு சரியான நித்திரை இல்லைதான்; ஆயினும், இக்குறிப்பிட்ட இராத்திரியில் தூங்கவே இல்லை. ஆகையால் அவனுக்கு ஆகாரத்தில் விருப்பம் இல்லை; கீழேவந்தவுடன் ஏராளமான அளவுள்ள திராக்ஷை ரஸத்தை ஒரேயடியாய் உருஞ்சினான்.

பிறகு கீழே உட்காராமல் அவ்வுள்ளேயே உலாவிக்கொண்டு தனக்குள்ளேயே சிந்திக்கலாயினான். "எனக்கின்னதென்று சொல்லத்தெரியவில்லை; மனதோ சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறது. நாளையதினம் எப்பொழுது வரப்போகிறதென்று காத்துக்கொண்டிருக்கிறேன். இன்று இராத்திரி, பயங்கரமான நடுநிசியில், பூதபிசாசங்கள் வெளிக்கிளம்பும் நேரத்தில், ஸர்வஜித் இறப்பான். அவனுக்கு மரணதண்டனையைத்தருவித்துக்கொடுத்ததற்கு நான்தான் காரணம். இவ்விஷயத்தில் நானும் துணிச்சலாய்த்தான் நடந்திருக்கிறேன்; ஆயினும் இனி என்ன? நான் வென்றுவிட்டேன். இதுவரையில் லீலாவதி ஸர்வஜித்தை குற்றவாளியல்லவென்று எண்ணிவந்தாள். இனி அப்படி நினைக்கமாட்டாள். இனி அவனையே ஞாபகத்தில் வைப்பதையொழித்து அவனை மறந்துவிட கடும்பிரயத்தினங்கள் செய்வாள். முதன்முதலுண்டான துக்கமானது பனிபோல் நீங்கினவுடன், இப்பாதகனாகிய ஸர்வஜித்திடம் நேசம் வைத்தேனே யென்று துக்கிப்பாள். அப்பொழுது என்மேல் அன்புகொள்வாள். அப்பொழுது என் விஷயத்தில் அவள் முகம் புன்னகைகள் கொண்டு பிரகாசிக்கும். ஆ, அப்படிப்பட்ட காலத்தில் எனக்குண்டாகும் ஆநந்தத்தை என்னென்று சொல்லுவேன். நான் இவ்வளவு காலமாக பட்டபாடுகளுக்கும், நான் பட்ட விசாரத்திற்கும் இந்த வெகுமதி இல்லாமற்போனால் பிரயோசனமென்ன? நான் மாத்திரம் சும்மா வாயை மூடிக்கொண்டிருந்து, ஸர்வஜித்சொன்ன காட்டுப்பன்றி கட்டுக்கதையை நியாயாதிபதிகள் மாத்திரம் நம்பிவிட்டால் இவ்விஷயம் எப்படி முடிந்திருக்கும்? அதை நினைத்தலைக்கூட நான் சகிக்கமுடியவில்லை. என் அத்தாக்ஷியாலல்லவோ முற்றும் மாறாக முடிந்தது? நான் மாத்திரம் சும்மாவிருந்திருந்தால் நியாயாதிபதிகள் ஸர்வஜித்துக்கு இத்தண்டனையை விதித்திருக்கமாட்டார்கள். அற்ப தண்டனையோடு நிறுத்தியிருப்பார்கள். இப்பவோ, ஸர்வ

ஜித் தலைந்தான். லீலாவதி அவனைப் புகழ்வதற்குப் பதிலாக இனி இகழ்வாள். இனி ஸர்வஜித் தப்பமாட்டான். ஆயினும் இன்று இரவுபோய் நாளைப் பொழுது எப்பொழுது விடியப்போகிறதென்றிருக்கிறேன். ஏன் என் மனது சஞ்சலப்படுகிறதோ தெரியவில்லை. நான் எதற்காக பயப்படவேண்டும்? நான் இதுவரையிற்கொண்ட சங்கற்பங்கள் யாவும் யாதொரு விக்கினங்களின்றியே நிறைவேறி வந்திருக்கின்றன. ஐயமுள்ளவரையில் பயமில்லை. ஆகையால் நான் ஏன் பயப்படவேண்டும்—" என்று இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில் மரணதண்டனையை நிறைவேற்றவென்றே அக்கோட்டையிற் றங்கியிருந்த ஜில்லா அதிகாரிவந்தான். ஒருவரையொருவர் மரியாதையாய் விசாரித்து விட்டு, பிறகு நடக்கப்போகும் காரியத்தைக் குறித்துப்பேசினார்கள்.

"இதுவரையில் நடந்தேறியிருக்கும் விஷயங்கள் இன்னது" என்று அதிகாரி சொல்லுகிறான். "காட்டில் விசாலமான இடம் துப்புரவு செய்யப்பட்டிருக்கிறது. தூக்குமரத்தை நட்டாய்விட்டது. இனி காலை போஜனஞ் செய்தவுடன் மடத்திற்குச் சென்று கைதியின் ஆத்ம நன்மையின்பொருட்டு குருமார்களில் சிலரை அழைத்துவரவேண்டும்."

"எனக்கு இப்போது உடம்பு ஒரு மாதிரியாய் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் நானும் தங்களுடன் கூடவருவேன்" என்றான் அரங்கன்.

இத்தருணத்தில், கோபாலன் அறையிற்பிரவேசித்து, பிரபுவின் காதில் சிலவார்த்தைகளைச் சொன்னான்.

"ஆ, வரதனுக்கு உடம்பு சரியாயில்லையா என்ன? அவன் என்னை உடனே பார்க்க விரும்புகிறானா? இதோ வந்துவிட்டேனென்று சொல்" என்றான் அரங்கன். கோபாலன் தலைகுனிந்து அவ்விடம் விட்டகன்றான்.

ஆனால் இவ்விடத்தில் நாம் சிறிது தங்கி கோபாலன் எப்படி வரதனிடமிருந்து அரங்கனிடஞ்சென்ற தூதனாக ஏற்பட்டானென்பதை விசாரிக்க வேண்டிய தவசியமாயிருக்கிறது. கோபாலனுடைய அறை வரதனுடைய அறைக்கு நேர்முகமாயிருந்தது; ஆகையால் அக்கிழவன் தான் வெளியே போகாதபடி அசௌக்கியமா யிருக்கிறதைக் கண்டு தன் படுக்கையிலிருந்தபடியே கோபாலனைக்கூப்பிட, அச்சிறுவனும் வரதனிடத்தில் நல்லபிப்பிராயம் கொண்டிராவிட்டாலும், அரங்கனுக்கு செய்தியை தெரிவிக்கிறதாகிய அற்ப உதவியை செய்ய பின்வாங்கவில்லை. வரதனைப்பார்த்தவுடன் அவனுடைய கோரமான மாறுதல்களைக்கண்டு பிரமித்து நின்றான்; தவிரவும், வரதன் உடனே அரங்கனை தன்னிடம் வரும்படி சொன்னதை அரங்கனிடம் தெரிவித்தவுடன், அரங்கனும் மனோ சஞ்சலத்தை யடைவதையும் கோபாலன் கவனித்தான். ஏற்கனவே, கோபாலனுக்கு இவ்விருவர்களிடத்திலும் பலத்த சம்சயங்களுண்டு. கோபாலன் ஸர்வஜித்தைக் குற்றவாளியென்று சிறிதேனும் எண்ணாதவனாதலால், சீமாட்டி லீலாவதியின் நிமித்தம், எஜமானும் காரியஸ்தனும் ஒன்றுசேர்ந்து ஸர்வஜித்தை யமனுக்கிரையாக்க அபாண்டப் பொய்களைச் சொல்லியிருக்கக்கூடுமென்று சந்தேகித்தான்.

இச்சந்தேகங்கள் பலப்பட்டதால், பிரபுவும் ஊழியக்காரனும் பேசிக்கொள்வதை யறிந்து கொள்ளவேண்டுமென்று ஆவல்கொண்டான். ஆனால் இதை யெப்படிச்செய்வது? உடனே ஒருயுக்தி தோன்றிற்று. வரதன் அறையில் மறுபடிபிரவேசிக்கும்போது கதவை விரியத்திறந்துவைத்தான். உள்ளே சென்று வரதனைப் பார்த்து, "பிரபு இன்னும் சில நிமிஷங்களுக்குள் இங்கு வந்துவிடுவார். நான் செய்யவேண்டியது வேறு ஏதாவது உண்டா?" என்று கோபாலன் கேட்க, வரதன் "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, கொஞ்சம் உடம்பு சரியாயில்லை—அதுவும் சீக்கிரம் நீங்கிவிடும். நீ இனிபோகலாம்" என்று பதில் சொன்னான்.

உடனே கோபாலன் வெளியே போய்விட்டவன் மாதிரி கதவை பலமாய் சாத்தினான். ஆனால் உண்மையில் உள்ளேயே நின்றுகொண்டு கால் கைகளால் சிறிதும் சத்தஞ் செய்யாமல் ஊர்ந்துகொண்டே கட்டிலின்கீழே பதுங்கிக்கொண்டான். கட்டிலின் தலைப்புறம் கதவிருந்த மூலையோடு ஒட்டியிருந்ததால் வரதன் கோபாலனுடைய செய்கையைப் பார்க்கவில்லை. கோபாலன் வெளியே போய்விட்டானென்னும் கொள்கையை கைக்கொண்டிருந்தான்.

36-வது அத்தியாயம்.

கோபாலன் கட்டிலின்கீழ் பதுங்கிக்கொண்டானோ இல்லையோ பிரபு அநங்கனும் அறையிற் பிரவேசித்தான். வரதனுடைய முக மாறுதல்களைக் கண்டு நடுநடுங்கி என்ன ஆபத்துவந்துவிட்டதோவென்று ஏங்கினவனாய் வரதனைப்பார்த்து, "வரதா என்ன இப்படி யிருக்கிறாய்? உனக்கென்ன உடம்பு? திடீரென்று இவ்வளவு ஜாடை மாறுதல்கள் ஒரு தினத்திற்குள் உண்டாயிருக்கக் காரணமென்ன?" என்று அநங்கன்கேட்க, வரதன் "முதலில் கதவைப்பாருங்கள், அது சாத்தப்பட்டிருக்கிறதாவென்பதை நிச்சயஞ்செய்து கொள்ளுங்கள்" என்று மஹாஹீனமான குரலோடு சொன்னான்.

அநங்கன் முந்தியைக் காட்டிலும் அதிக திகிலையடைந்தான். ஆயினும் வரதன் சொன்னபடி கதவைத் சாத்தினதோடு நிற்காமல், தங்களிருவர்களுடைய சம்பாஷணைக்குத் தடைகளேற்படாதபடி, அதைத் தாளிட்டு விட்டான். மறுபடியும் கட்டிலண்டை வந்துட்கார்ந்து எத்தாமதத்தையும் பொறுக்காதவன்போல், "வரதா, உனக்கென்ன உடம்பு? என்ன நடந்துவிட்டது? எனக்காக ஏன் இவ்வளவு அவசரமாய் சொல்லியனுப்பினாய்?" என்று கேட்க, வரதன் "பிரபுவே, பிரமாதமாயும் பயங்கரமாயுமுள்ள ஆபத்துக்கள் நம்மைச்சூழ்ந்திருக்கின்றன—"

"ஆபத்துக்கள்? எந்தாபத்துக்களைக் குறித்துப்பேசுகிறாய்? உள்ளதை உடனே சொல்லிவிடு, நீ சொல்லுவது பீதியையுண்டு பண்ணுகிறதே" என, வரதன் "நானென்ன செய்வேன்? நான் தூக்கத்தில் சஞ்சரிக்கிறவன்—"

அநங்கன்:—"சரி, எல்லாம் விளங்கிவிட்டது. நீ தூக்கத்தில் பல சங்கதிகளை வெளியிட்டு விட்டாய்போலிருக்கிறது—"

வரதன்:—"இல்லை, பிரபுவே இல்லை. ஒருவார்த்தையைக்கூட வெளியிட்டவனல்ல; அதாவது எனக்குத் தெரிந்தவரையில் வெளியிடவேயில்லை. ஆனால் பலவருஷங்களாக தூக்கத்தில் நடக்கிற சுபாவத்தையடைந்து, காட்டில் நடந்துகொண்டே ஞாபக ஸ்தம்பத்தினடியில் விழித்திக்கொண்டிருக்கிறேன்—"

அநங்கன்:—(அவசரத்துடன்) "சரி, போதும் போதும்."

வரதன்:—"அல்லது கோட்டையிலுள்ள சிறு கோயிலின் பலிபீடத்தருகில் மண்டி போட்டுக்கொண்டிருக்கையில் விழித்திக்கொண்டிருக்கிறேன். நான் இப்படி விழித்துக் கொள்ளும்போதெல்லாம் நான் அனுபவித்திருக்கிற மனோ வேதனையையும் திகிலையும் என்னால் எடுத்துச்சொல்ல முடியவில்லை."

அநங்கன்:—"என்னவரதா இவ்வளவு பயித்தியக்காரனாய் விட்டாய்? நீ சொல்லுவதைக் கேட்க எனக்கு வெட்கமாயிருக்கிறதே. பல பேய்பிசாசுகளின் உருவங்களுக்கு மத்தியில் வசித்துவந்த உனக்கு திகில் வர நியாயமென்ன?.

வரதன்:—நான் சாதாரணமாய் விழித்துக்கொண்டால் பயப்படமாட்டேன். ஆனால் நான் தூக்கத்தில் சஞ்சரிக்கும்போதெல்லாம் ஒரு இறந்த மனிதனுடைய பிசாச ரூபம்—அதாவது அவனுடைய எலும்புக்கூடு—என்னைத் துரத்திவருவதைக் கண்டிருக்கிறேன். அம்மனிதன் யாரென்று உங்களுக்குத் தெரியும்—"

அநங்கன்:–(இவ்விஷயத்தைக்கேட்கப் பிடிக்காமல்) "போதும் போதும் இதெல்லாம் வேண்டாம். நாம் முக்கிய விஷயத்தைக் குறித்துப்பேசுவோம். நமக்கு நேர்ந்திருக்கும் அபாயமென்ன? அதைச்சொல்.

வரதன்:—நான் சொல்லுவதை சற்றுப்பொறுமையோடு காது கொடுத்துக் கேட்கவேண்டும். நேற்றிரவு என்னைப் பிடித்தாட்டிவரும் நோயால் வெளிக்கிட்டேன்; வழக்கம்போல் காட்டில் அலைந்துகொண்டிருந்தேன். ஆனால் ஞாபக ஸ்தம்பத்தண்டை விழித்துக்கொள்ளவில்லை; ஸர்வஜித்தை இரையாக்கிக் கொள்ளப்போகிற தூக்குமரத்தை நோக்கி நடந்துவிட்டேன்! இதெல்லாம் எனக்குத்தெரியாது. ஆனால் அங்கிருந்த சில மனிதர்கள் தங்கள் பின்னோடு வரும்படி என்னை உலுக்கினார்கள். அப்போது விழித்துக்கொண்டேன். வந்துநின்ற இடத்தையும் தூக்குமரத்தையும் கண்டவுடன் உடனே மூர்ச்சித்து விழுந்துவிட்டேன். எனக்கு மறுபடியும் ஞாபகம் வந்தபோது நான் மலைக்கோட்டையி லிருக்கக்கண்டேன்.

அநங்கன்:— "மலைக்கோட்டையிலா? அங்கு எதற்காக நீ கொண்டு போகப்பட்டாய்? எதற்காக அந்த அயோக்கிய திவட்டிக்கொள்ளைக்காரர்கள்—"

வரதன்:—நான் சொல்லுவதை செவிகொடுத்துக் கேளுங்கள்; பொறுமையாயிருங்கள். இக்கதையை ஒரு நிமிஷத்தில் சொல்லமுடியாது. நான் அந்த முரட்டுச் சகோதரர்களுடைய சமுகத்தை யடைந்தபோது, நான் அங்கு கொண்டுவரப்பட்டதின் காரணத்தை உடனே தெரிவித்தார்கள். இங்கு நடந்த விசாரணையின் விஷயங்கள் யாவற்றையும் அவர்கள் தீர அறிந்திருக்கிறார்கள்; நாம் சொன்ன அத்தாக்ஷிகள் யாவும் அவர்களுக்குத்தெரிந்திருக்கிறது. ஸர்வஜித் உம்மிடத்தில் ஒத்துக்கொண்டதாகச்சொன்ன யாவும் பொய்யென்று நிரூபிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். முதலாவது, ஸர்வஜித் தங்களிடஞ்சொன்ன பிரகாரம் உங்களுடைய ஆட்கள் இருவரும் மலையதிபதிகளின் ஆட்களால் சண்டையில் கொல்லப்பட்டது உண்மை; சண்டை நடந்த இடத்தை நான் நேரே என்கண்ணால் பார்த்தேன்; ஒருவனைக்கொன்றவனும், மற்றவன் கொல்லப்படுவதைப பார்த்தவனுன ஒரு ஆள்தான் இக்கோட்டைக்குத் திரும்பிக்கொண்டு வந்துவிட்டுப்போனது. இரண்டாவது—ஆனல் கிட்டவாருங்கள், இதை மெதுவாய்க் காதோடே சொல்லவேண்டும்" என்று அநங்கனை கிட்டவரும்படி அழைக்க, அநங்கன் இவ்வித இரகசிய ஜாடைகளையெல்லாங் கண்டு பயந்து விசாரம்மேலிட்டு வரதன் முகத்தண்டை காதை வைக்க, அவன் சுருக்கமாக சிலவார்த்தைகளை ஓதினுன்.

வரதன் வார்த்தைகளைக்கேட்டதும் அநங்கன் "ஐயோ" வென்றலறிக்கொண்டெழுந்தான். எழுந்தவன் "ஐயோ, நம்பமுடியவில்லையே. நீ சொல்லுவது முழுதும் ஸ்வப்ன பிராந்தியாயிருக்கவேண்டும். நீ தூக்கத்தில் நடக்கிறவனுதலால் எதையோகண்டு என்னமோ உளருகிருய்—" என, வரதன் "நான் தெரிவித்தது பிரமையல்ல. நான் சொல்லுவது உண்மையிலும் உண்மையே. இதைப்பற்றி நீங்கள் சந்தேகங்கொள்ளவேண்டாம். இவ்விஷயத்தை நிச்சயமென வைத்துக்கொண்டு இனி நான் சொல்லுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். குண்டசீலன் சிமாட்டி லீலாவதி தனது மனைவியாக வேண்டுமென்று சபதஞ்செய்திருக்கிறுன்—"

"அயோக்கியத் திருட்டுப்பயல்! நான் அந்த அழகிய பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தை ஒழித்துவிடும்படி கேட்கிருனே?" என்று அநங்கன் கேட்க, வரதன்,

"அவர்கள் கேட்பது அத்துடன் நின்றுவிட்டால் எப்படியோ சிரமப்பட்டு நாம் அவர்களுடைய நிபந்தனைக்கு இணங்கிவிடலாமே. நீங்கள் இதைக்குறித்து இணங்கிவிடுவீர் என்று நிச்சயங்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாய்க்கேட்பது, நீங்கள் பிரபு புஷ்யமித்திரரிடத்தில் சிபார்சுசெய்து அவருடைய புத்திரியை குண்டசீலனுக்குக் கொடுக்கும்படி காரியத்தை முடிக்க வேண்டுமாம்."

"அடே படுபாவி கெடுத்தானே! இவனுக்கு என்ன அகந்தை! என்ன நெஞ்சுத்துணிவு! ஒரு எஜமான் தன் வேலைக்காரனை அதிகாரஞ்செய்கிற மாதிரியல்லவோ அதிகாரஞ்செய்கிறுன். இருக்கட்டும், இவன் நிபந்தனைக்கு நான் இணங்கமாட்டேனென்று விட்டால்?"

"நீங்கள் இணங்காவிட்டால் நாம் இருவரும் பொய்யர்களென்று நிரூபமாகக்கூடிய அத்தாக்ஷிகளை வெளிப்படுத்துவார்கள். குண்டசீலன் சொன்ன

வார்த்தைகள் இவைகளே. (அனந்தகிரி பிரபுவினிடத்தில் சொல்லு: நாளை சூரியாஸ்தமன நேரத்திற்குள்ளாக சீமாட்டி லீலாவதி என்னுடைய பத்நியாக ஆவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேனென்று கையெழுத்துப் போட்டு ஒரு பத்திரத்தை அனுப்பாவிட்டால், நான் அவருக்கு விரோதமாயுள்ள அத்தாக்ஷிகளை உடனே வெளிப்படுத்துவேன்.)"

"ஆமாம், நான் புஷ்யமித்திரரிடத்தில் சொல்லக் கூடியதைச் சொல்லலாம். அவரைச் சம்மதிக்கச் செய்வதுகூட என் கையிலிருக்கிறதா?"

"அதைப்பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. புஷ்யமித்திரர் சம்மதித்தால் சந்தோஷம். சம்மதிக்காவிட்டாலும் சீமாட்டிலீலாவதி இன்றுமுதல் இருபத்தொரு தினங்களுக்குள்ளாக அவர்கள் கையிலகப்படும்படியான ஏற்பாடுகளைச்செய்தால் போதுமென்கிறார்கள்."

"சரி, இதுவரையில் அவர்கள் சொல்லுக்கிசைந்து நடக்காவிட்டால் வரும்பயன்களைக் குறித்துச்சொன்னாய். அவர்கள் சொல்லுக்கிசைந்து நடந்தால் நாமடையும் இலாபங்களென்ன?"

"நமக்கு விரோதமாயுள்ள அத்தாக்ஷிகளெல்லாம் அழிக்கப்படும்? நான் சொல்லுவது விளங்குகிறதா?" என்று குறிப்பாய்க்கேட்டான்.

"எல்லாம் நன்றாய் விளங்குகிறது; சாகப்போகிறவன் ஸர்வஜித்மாத்திரமல்ல, கிடங்கிலிருக்கிற கைதியும் சாகப்போகிறான் என்கிறாய்?" என்று அநங்கன் சொல்ல, வரதன், "அதேதான்; ஆகையால் நாம் பத்திரத்தை எழுதிக்கொடுத்தால், இன்னும் இருபத்தோரு நாட்கள் இருக்கின்றனவே, பார்த்துக்கொள்ளுவோம். அதற்கிடையில் பத்திரத்துக்கு விரோதமாய் போகக்கூடிய அநுகூலங்கள் ஏற்படாதா பார்ப்போம்" என்றான். அதற்கு பதிலாக அநங்கன், "நீ சொல்லுவது சரிதான். நமக்கு இப்போது வந்திருக்கும் ஆபத்தைத் தவிர்க்கவேண்டியது முக்கியம். இக்கள்ளர்களுக்கு இப்பத்திரத்தை எழுதித்தருவது மனதிற்கு மகாகடினமாகத்தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது? வேறு வழியைக்காணோம். அதிருக்கட்டும்; பத்திரத்தை யார் கொண்டுபோவது? நீயோ படுத்த படுக்கையாயிருக்கிறாய்—" என, வரதன் "அதைப்பற்றி யோசனை கொள்ளவேண்டாம். நேற்று என்னை இங்கு கொண்டு வந்து விட்டுப்போனவன் இன்று சாயந்திரம் சில ஆட்களோடு இங்குவருவான்; அவர்கள் வந்திருப்பதைக்குறித்து ஜனங்கள் தாறுமாறுய்ச் சொல்லிக்கொள்ளாதபடி, நம்மிடத்தில் சென்ற இரண்டு மூன்றுமாதங்களாக மலையதிபதிகள் துராகிருதமாய் நடந்துவந்ததற்காகச் சமானஞ்செய்துகொள்ள தூதர்களை யனுப்பி யிருப்பதாகச் சொல்லிக்கொள்ளலாம். அச்சமயத்தில் அவனிடத்தில் பத்திரத்தைக் கொடுத்து விடலாம்."

"சரி, பத்திரத்தை யெழுத என்னறைக்குச் செல்லுகிறேன். என்ன ஆச்சரியம்! இவ்வளவு வருஷங்களாக நம்மிடத்திலேயே இருந்த அதிர்ஷ்டதேவதை நம்மிடத்தை விட்டுப்போய் நமக்கு விரோதமாய் திரும்பியிருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே அநங்கன் அவ்விடம்விட்டகன்றான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் கோபாலன் கட்டிலின் கீழேயிருந்து சத்தமில்லாமல் ஊர்ந்துகொண்டே வந்து வரதன் காணாதபடி வெளியே போய்விட்டான்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

மிதக்கும் வஸ்துக்கள்

* ஹைட்ராமீடர்களும் கப்பல்களும்.

மிதக்கும் வஸ்துவின் கனம் அவ்வஸ்து அடைத்துக்கொள்ளும் இடத்தில் உள்ள ஜலபதார்த்தத்தின் கனத்துக்குச் சரியாய் இருக்கும் என்று போன பாடத்தில் சொன்னோமல்லவா? இவ்வுண்மையை முன்னிட்டு ஜல பதார்த்தங்களின் பொருள் நெருக்கத்தை (Density) அறிய ஒரு நயமான கருவியுண்டு. அது பக்கத்தில் வரைந்துள்ள படம் போன்றது. இதற்கு ஹைட்ராமீடர் (Hydrometer) என்று பெயர். A என்றுபோட்டுள்ள பாகம் ஒரு குழாய். இதுமேலே மூடியிருக்கிறது B என்று போட்டிருப்பது கொஞ்சம் பாதரசம்; இது இக்கருவியை நேராய் மிதக்கச் செய்யும். ஜலத்தில் இக்கருவியை மிதக்கவிட்டால் ஏதோ ஒரு ஆழம் + வரையில் போவதாக வைத்துக்கொள்வோம். இந்நிலைமையில் கருவியின் முழுகனமும், கருவி அடைத்துக்கொண்டிருக்கும் இடத்தில் உள்ள ஜலத்தின் கனமும் சரியாய் இருக்கும். இதை எடுத்துத் துடைத்துவிட்டு, கிரோஸின் எண்ணெயில் வைத்தால் ஜலத்தில் இருப்பதைவிட அதிகபாகம் எண்ணெயில் கீழேபோய் விடுகிறது. ஏனெனில், எண்ணெய் ஜலத்தைவிட இலேசானதுபற்றி. ஒரு பாத்திரத்தினால் பானகம் கரைத்து அதில் இக்கருவியை வைத்தால் அதில் ஜலத்தில் மூழ்கினதைவிட குறைவாகவே மூழ்கும். ஏனெனில் பானகம் ஜலத்தைவிட தடிப்பானது. இவ்விதமாய் பல திரவபதார்த்தங்களிலும் மிதக்கவிட்டால் அவற்றின் பொருள் நெருக்கத்துக்குத் தக்கபடி ஜலத்தில் மிதந்த அளவைவிட மேலேயோ கீழேயோ மிதக்கும். இவ்விதமான ஒரு கருவியைக்கொண்டு ஜலபதார்த்தங்களின் பொருள் நெருக்கத்தை அறிந்துகொள்ள சுளுவாயிருக்கும் பொருட்டு, அதை பல பதார்த்தங்களிலும் மிதக்கவிட்டு, நேரே பரீக்ஷைசெய்து அதன் தண்டின்மேல், 1, 2, 3 என்னும் ஒன்றுக்குக்கீழ் $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, என்றும் குறிப்புப் போட்டிருக்கும். ஏதாவது ஒரு திரவப்பொருளின் பொருள் நெருக்கத்தை (Density) நாம் அறிய விரும்பினால் அதில் ஹைட்ராமீடரை மிதக்கவிடவேண்டியது; அப்பொழுது 2, என்ற குறிப்புவரையில் அப்பொருளில் மூழ்கினால் அதன் (Density) ஜலத்தைவிட இரண்டு பங்கு அதிகம் என்று அறிந்துகொள்ள வேண்டியது. இம்மாதிரி பலவிதமான கருவிகள் உண்டு. எல்லாவற்றிலும் ஒரே உண்மையை அநுசரித்துத்தான் பொருள் நெருக்கத்தை (Density) அளக்க உபாயங்கள் செய்திருக்கும்.

* [ஹைட்ராமீடர் சித்திரப்படம் தயாராகாததைப்பற்றி மிக்க விசனிக்கிறோம். அடுத்த பத்திரிகையில் இது வெளிவரும்—ப. ர்.]

பாலின் சுத்தத்தை அளக்கும் கருவியும் இம்மாதிரியானதுதான். இதற்கு லேக்டோமீடர் (Lactometer) என்று பெயர். சுமாராய் சுத்தமாயிருக்கும் பாலில் இக்கருவியை மிதக்கவிட்டால் அதன் தண்டில் + என்று போட்டிருக்கும் குறிப்புவரையில் பாலில் மூழ்கி மற்றபாகம் மேலே மிதக்கும். இந்தக்குறிப்பிற்குமேலும் கீழும் பலகோடுகள் கிழித்திருக்கும். இக்கோடுகளும் பரீக்ஷைசெய்து பிறகுதான் கிழித்தகோடுகள். ஆகையால் சுத்தமான பாலில் நூற்றுக்கு பத்துப்பங்குஜலம் கலந்திருந்தால் சுத்தமான பாலில் மூழ்கினதைவிட அதிக பாகம் மூழ்கிப்போகுமல்லவா? அவ்விடத்தில் பத்து (10) என்று போட்டிருக்கும். அதைப்பார்த்து நூற்றுக்குப்பத்து (10) பங்கு ஜலம் கலந்ததென்று அறிந்துகொள்ளலாம். மற்றொரு விதப்பாலில் இம்மாதிரி பரீக்ஷைசெய்து அதில் 20 என்று போட்டுள்ள கோடுவரையில் மூழ்குமானால் அதில் நூற்றிற்கு 20, பங்கு நீர் கலந்திருக்கிறதென்று அறியலாம். நன்றாய் சிவக்கக்காய்ச்சின எருமைப்பாலில் கருவியை மிதக்கவிட்டால் + என்ற குறிப்புக்கூட மேலே தெரியும்படி மிதப்பினும் மிதக்கலாம். இவ்விதமான கருவியை உபயோகித்து வழக்கமுள்ளவர்கள் வெகு எளிதாய் பால் சுத்தமாயிருக்கிறதா, அல்லது அதில் ஜலம் கலந்திருக்கிறதா, அப்படியானால் எவ்வளவு கலந்திருக்கிறது என்று கிட்டத்தட்ட சரியாய் சொல்லி விடுவார்கள்.

சாராயத்தில் ஜலம் கலந்து இருந்தால் அதை அறிந்து கொள்ளும் கருவியும் இம்மாதிரியானதுதான். ஒவ்வொரு சால்ட் சப் இன்ஸ்பெக்டர் இடமும் இக்கருவி இருக்கும். நேரில் பார்த்துபரீக்ஷை செய்துகொள்ளலாம். கூடியவரையில் சரியாய் திரவப்பொருள்களின் தடிப்பத்தை (Density) கண்டுபிடிக்க நாமே சொந்தமாய் ஒரு ஹைட்ராமீடர் செய்து வைத்துக் கொள்ளலாம். டெஸ்ட்டியூப் (test-tube) என்று சொல்லும் ஒரு கண்ணாடிக்குழாயை எடுத்துக்கொண்டு அதன் உட்புரத்தில், அங்குலங்களாகவும், அங்குலங்களின் பாகங்களாகவும் வகுத்துள்ள ஒரு காகிதத்துண்டை ஒட்டவைத்துவிடுவோம். இப்பொழுது டியூப் நேராய்மிதக்காது; ஏனெனில் அடியில் கனம் இல்லை. சரியாய் மிதக்கும்படிசெய்ய அதனுள் சில சிறு ஈயக்குண்டுகளைப் போடுவோம். அதன்வாயைப் பிறகு ஒரு கார்க்கினால் மூடி விடலாம். இதுவே ஒரு நேர்த்தியான ஹைட்ராமீடர் ஆய்விடுகிறது. இதை எப்படி உபயோகிப்பது என்று சொல்லுகிறேன் கேளுங்கள். பால் ஆகட்டும், ஜலம் ஆகட்டும், சாராயம் ஆகட்டும், நமக்கு இஷ்டமான ஒரு வஸ்துவில் நாம் செய்திருக்கிற டியூபை வைப்போமாகில் அதன் ஒரு பாகம் மேலும் மற்றபாகம் அடியிலும் மிதக்கும் அல்லவா? எவ்வளவு அங்குலம் என்று நன்றாய்ப் பார்த்துக்கொண்டு கார்க்கைத்திறந்து அவ்விடத்திற்கு நேராய் ஒரு கோடு போட்டுக்கொள்ளலாம். நாம் எடுத்துக்கொண்ட வஸ்து பாலாயிருப்பின் அதேமாதிரியான பாலில் எப்பொழுது வைப்பினும் அதே ஆழந்தான் மூழ்குமல்லவா? ஆகையால் நாம் போட்டுச்கொண்ட கோடு அளப்பதற்கு ஆதாரம் ஆகிறது. இதைவிட அதிகமாக ஜலம் கலந்திருந்து தடிப்பம் குறைவாகவிருந்தால் அதையும் தெரிந்து கொள்ளலாம்; தடிப்பம் மிகுதியாக விருந்தால், நாம் கிழித்தகோடு பதார்த்தத்திற்கு மேலே மிதக்கும். அதிக பணச்செலவில்லாமல் ஒவ்வொரு வீட்டிலும்செய்து வைத்துக்கொள்ளக் கூடியகருவி இது ஒன்று.

ஆனாலும் இப்பரீக்ஷைகளால் பாலின் சுத்தத்தை சுமாராய் நிச்சயிக்கலாமே யொழிய முற்றிலும் நம்புவதற்கு இடமில்லை. ஏனெனில் சில மாடுகளே நல்ல பால் கறபபதில்லை. அப்பாலில் வைத்தோமானல் கோடோ அல்லது குறிப்போ பாலுக்குக் கீழே போய்விடும்; அதனாலேயே அதிக அசுத்தமானதென்று எண்ண இடமில்லை. ஆகவே, அதிகமாய் மோசம் போகாமல் இருப்பதற்கு எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கலாமோ அவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க உதவும், மேலேசொன்ன கருவிகள்.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

நோயில்லாமல் வாழ்வதெப்படி?

“நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும்” என்று பழமொழி சொல்வதுண்டு. அதன்படி நோயில்லா வாழ்வே வாழ்வு. எவ்வளவு செல்வமிருப்பினும் எத்துணை ஏவலாளர் இருப்பினும் தேகசௌக்கிய மற்றவர்கள் சுகம் அநுபவிக்கக் கூடுமோ? அவர்கள் உயிருடன் இருப்பதைவிட உயிர் துறப்பதே நலம் என்று பலதடவைகளில் எண்ணுகின்றனர்; எமனையும் வருந்தியழைக்கின்றனர்; ஒவ்வொரு பத்திரிகையின் பக்கத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்து அதில் பிரசுரம் செய்து இருக்கும் ஒவ்வொரு மருந்தையும் தங்களுக்குச் சேருமென்று நினைத்து அதைப் பற்றி எழுதியுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் படித்துப் பார்த்து மன முருகி வகை தெரியாமல் மதி மயங்குகின்றனர். எத்தனைபேர் தங்கள் மேஜையெல்லாம் சீசாக்களாக நிரப்பிக்கொண்டு வேளைக்கு ஒருமருந்தை குடித்துக்கொண்டு “தும்பினல் குற்றம் இரும்பினல் குற்றம்” என்று பிதற்றிக்கொண்டு நல்லுணவு தின்ன பயந்து நாக்குச்செத்துக் கிடக்கின்றனர்!!

ஜலத்தில் வீழ்ந்து முழுகுவோன் கையில் கிடைப்பவற்றையெல்லாம் பிடித்துக்கொண்டு தப்ப முயல்வதுபோல ஒவ்வொருவர் சொல்லும் மருந்தையும்வியாதியஸ்தர்கள் உபயோகிப்பது மிகவும்ஸகஜம் தானே! அத்தகைய ஜனங்களுக்கு நான் இப்போது சஞ்சீவிகளையும், அம்மருந்துகளையும், எலெக்டிரிக் மோதிரங்களையும், மற்ற முறைகளையும் சிபார்சு செய்யப்போவதாக எண்ணவேண்டாம்; மிகவும் சுளுவாய் சிறிதும் செலவு இல்லாமல், தேகத்தை சௌக்கியமாய் வைத்துக்கொள்ள எல்லாரும் செய்யக்கூடிய வழி ஒன்றுண்டு. அதைப் பற்றி சிறிது எழுதுகிறேன்.

எப்பிரல் மாதத்துக் கான்டம்பொரரி ரிவ்யூவில் (Contemporary Review) மிஸ்டர் அப்டன் ஸிங்லேர் என்பவர் நோயின்றி எப்பொழுதும் சுகமாய் மனிதர்கள் வாழ ஒரு உபாயம் சொல்லுகிறார். அது என்னவென்றால் அவர் அவர்களுக்கு தக்கபடி பட்டினிகிடப்பதே எல்லா வியாதிகளுக்கும் நேரான அவுஷதம் என்கிறார். தனது அநுபோகத்தை உலகத்தார் அறியும்படி மேற்சொன்ன ரிவ்யூவில் அவற்றைவெளியிட்டு இருப்பதாகவும் சொல்லுகிறார். “உடம்பு சௌக்கியமில்லாமலாவது, தேகம் அதிக

மாய் பருத்தாவது, தேகம் வரவர இளைத்தாவது—அல்லது வேறு எவ்வித மாயாவது கெட்டுப்போய்க் கொண்டே வந்தால் அவ்வியாதிகளை முற்றிலும் தீர்த்துக்கொள்ள வேண்டுமானால் பட்டினி கிடந்தால் போதும்" என்பது அவருடைய அபிப்பிராயம். அம்மட்டுமா? பட்டினி கிடப்பதினால் வியாதியே முற்றிலும் அற்றுப்போவதுமின்றி, தேக சௌக்கியம் மிகுந்து, உடல் சதை பிடித்து, அழகும் ஏற்படுகிறதாம்.

மிஸ்டர் அப்டன் ஸிங்க்ளேர் சொல்வது "பத்து வருஷகாலமாய் என் சுகக்கேட்டையும் என்னைச் சுற்றிலுமுள்ள பலருடைய தேகசௌக்கியத்தைப் பற்றியும் பரிக்ஷை செய்து பார்த்தேன். இப்பரிக்ஷைகளால் வியாதிகளுக்குக் காரணமும் அவ்வியாதிகட்குப் பரிகாரமும் இவை தான் என்று நன்றாய் அறிந்து கொண்டேன். வியாதிகள் நீங்கி இறக்குமளவும் இளமைப் பருவத்திலேயே இருப்பதற்கு பட்டினி கிடப்பதைப் போன்ற சுளுவான வழியே இல்லை!! நாம் எவ்வொருவரும் வேண்டுமளவிற்கு மேல் சாப்பிடுகிறோம், என்பதற்குச் சந்தேகமில்லை! அது பற்றி தேகத்துக்குக் கேடுவிளைவிக்கக் கூடிய வஸ்துக்கள்—கொதித்துப் புளித்துப் போகும் வஸ்துக்கள்—நிரம்பி விடுகின்றன. அது கெட்ட வஸ்துக்களை நீக்க தேகத்தில் உள்ள உருப்புகளால் உடனுக்குடனே முடிவதில்லை. பட்டினி கிடந்தால் தான் அசுத்தம் நீங்க வழியுண்டாகிறது.

"பட்டினி கிடக்க ஆரம்பித்தவுடனே ஜீரணம் செய்யும் கருவி வேலை செய்வதில்லை. உடனே தேகம்தானே சுத்தம் செய்து கொள்ளத்தொடங்குகின்றது. அப்பொழுது நாமும் தக்கபடி உதவிசெய்ய வேண்டும். எப்படியெனில் தினமும் ஸ்நானம் செய்வது ஒன்று; 'எனீமா' என்னும் குழாயால் உள்ளே இருக்கும் அசுத்தங்களை வெளிப்படுத்துவது இரண்டு; மூன்றாவது நிரம்பஜலம் குடித்தல். இம்மூன்று கரியங்களும் செய்வோமேயானால், அசுத்தங்கள் வெளிப்படுவது நன்றாய் புலப்படும். நாக்கில் அழுக்குப்படியும்; மூச்சுக்காற்றும், வியர்வையும் அதிகமாய் நாறும். அசுத்தங்கள் முற்றும் நீங்கும் வரையிலும் இவ்விதமாய் நாற்றங்கள் வந்துகொண்டே இருக்கும். தேகத்து விஷப்பொருள்கள் முற்றிலும் தீர்ந்துபோனபிறகு நாக்கில் அழுக்குப் படிவது இல்லை; நாக்கு சுத்தமாகின்றது. அப்பொழுதுதான் சரியான 'பசி' என்பது உண்டாகின்றது.

'தேகத்தின் கனம் குறைந்து போகாதோ எனின், ஆம் குறையும். தினத்துக்கு சுமார் 1 பவுன் எடை குறைகின்றது. பட்டினி ஆரம்பித்ததும் தேகத்தில் உள்ள கொழுப்பு முதலில் செலவாகின்றது. பிறகு தசை கரைகின்றது. எலும்பும் தோலும் குடலும் மிஞ்சும்போதுதான் உண்மையான பட்டினி ஏற்படும் காலம். 40, 50, நாள் இப்படி பட்டினியாய் இருப்பது தற்காலத்தில் சாதாரணமாய் இருக்கிறது. எனக்குத் தெரிந்துள்ளவர் பலர் இப்படி இருந்து இருக்கின்றார்கள். 72-நாளுக்குமேல் இதுவரையில் ஒருவரும் இருந்ததில்லை. பட்டினி முடிந்த பிறகு மறுபடி தேகத்தை வளர்க்கும்போது தேகம் சரியான கனத்தை அடைகின்றது.

இவ்வாறு செய்தல் நம்முள் பலருக்கு அசாத்தியமென்று தோன்றலாம். ஆயினும் மிஸ்டர் ஸிங்க்ளேர் அனுபோகமின்றி வீண்பேச்சு பேசவில்லை.

தானே பட்டினி கிடந்து அதன் பயனை அறிந்தபின்பே தான் எழுதுவதால் நம்முள் ஒவ்வொருவரும் அதைப்பற்றி விசேஷமாய்க் கவனிக்க வேண்டியது அவசியம். நமது நாட்டாருக்குப் பட்டினி கிடப்பது ஒரு அதிசயமன்று. "இலங்கணம் பரம ஔஷதம்" என்பது ஒவ்வொரு வீட்டிலும் பெரியோர் சொல்வதுண்டு. சாந்திராயணம், சாதுர்மாசிய விருதம் இவற்றை அநுஷ்டத்துவந்தவர் பலர். இந்நாளிலும் ஏகாதசி சிராவணம் இத்தினங்களில் முழுவதும் பட்டினிகிடப்பவர் பலர் உண்டு. ஆனால் மிஸ்டர் அப்டன் ஸிங்கிலர் சொல்லுகிறபடி 40, 50-நாள் ஒரே அடியாய் ஒரே உபவாசம் செய்பவர்களை நாம் அதிகம் கண்டதில்லை. இங்ஙனம் பட்டினிகிடப்பது சாத்தியமோ சத்தியமில்லையோ என்பதை நம்மவர்கள் பரிக்ஷை செய்து பார்ப்பது நலம் என்று தோன்றுகிறது.

ஆர். கே. சுவாமி, பி-ஏ.எல்-டி.

சிறுவர், சிறுமியர்களுக்கான பக்கம்.

நீ தி வ ழு வா மை.

ஜர்மன் கடலோரத்தில், நீர்வளம் பொருந்திய, சகல சம்பத்துமுடைய தேசமொன்றிருக்கின்றது. அத்தேசத்தில் "ஸாபினஸ், என்னுமோர் யௌவப்பருவமடைந்த புருஷனிருந்தான். அவன் அறிவிலும், சகலசம்பத்திலும் மிகவும் மேன்மையடைந்து வாழ்ந்துக்கொண்டிருந்தான். அவனுடைய ரூபலாவண்ணியமும், நடையுடைபாவனையும் காண்பவர்கள் மனதைக் கவரத்தக்கதாயிருந்தது. அவன், அவ்விடத்திலிருக்கப்பட்ட அதிரூபவதியாகிய ஒலிந்தா என்னும் யௌவனப்பருவ மடைந்தமாதின்மீது காதல்கொண்டு உடனே அவளை விவாகம் செய்துக்கொண்டான். அவ்விருவருடைய அன்பு நாளுக்குநாள் விருத்தியடையலாயிற்று. இவர்களைப்போன்ற தம்பதிகளை இவ்வுலகத்தின்கண் காண்பதரிதென்று ஜனங்களெல்லோரும்சொல்லிக்கொள்வார்கள்.

ஆனால் மானிடசுபாவம் எவ்வளவு இலக்ஷணமாயிருக்கின்றது! இவ்வுலகத்தின்கண் சிலமானிடர்களுக்கு, தனக்கு பிரஸ்தமாயிருக்கும் சுகம், பிறருக்குக் கிடைக்கக்கூடாது. ஒருசமயம் தைவயோகத்தினால், ஒருவருக்கு பிரஸ்தமாயிவிட்டால், அதை இல்லாமல் செய்யும் பொருட்டு விடாமுயற்சிசெய்யத் தலைப்படுகிறார்கள். இத்தகைய ஜனங்களுடைய சமூகத்திலிருந்து, சுயகஷ்டார்ஜிதமான, சுகத்தை அநுபவித்துவருவது எவ்வளவு கடினம்?

பரமேசுவரா! இத்தகைய துஷ்டப்பிராணிகளுடைய காற்றும் கூட உதவாது. மேற்சொன்ன குணத்தைத்தழுவிய, ஆரியானா என்னுமோர்,ஸ்திரீயானவள அதேதேசத்தில் வசித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கும் ஸாபினஸ்க்கும் ஏதோகொஞ்சம் பந்துத்துவமிருந்தது, அவள் நல்ல அறிவுடையவளா யிருந்ததுமில்லாமல் ஸாபினஸ்பேரில் காதல்கொண்டிருந்தாள். ஸாபி

னஸ் ஒலிந்தாவை கலியாணம் பண்ணிக்கொண்ட நாள்முதல் ஆரியானா மனதில் ஒரு கெட்ட எண்ணம் உதிக்கலாயிற்று. அதாவது, இவன் இப்பொழுது தன்னை பொருள்படுத்தாது, ஒலிந்தாவினுடைய வலையில் சிக்கிக்கொண்டுவிட்டான்; இவனுக்கு எதிரிலொருவர் இருக்கின்றார் என்னும் கூட கண்தெரிவதில்லை. ஆதலால் எவ்விதத்திலாவது இவ்விருவர்களுடைய அன்பிற்கும் பழுதுவருமாறு செய்யவேண்டுமென்பதனால், அவள் அல்லும் பகலும் பதுங்கியிருந்து, பலவிதமான உபாயங்களைத் தேடலானாளேயன்றி. எல்லாம் பயனற்றதாயிற்று.

இவ்வாறிருக்க, கடைசியாய் ஒருநாள் அவள் மனோபாவத்தின்படி ஸம்பவித்தது. அதாவதுஸாபினஸுக்கு கடன் அதிகரித்ததின்பேரில், கடனாளிகள் அவன்பேரில்பிராதுசெய்து, அவனைச்சிறைச்சாலைக்குப்போகும்படிவாரண்ட் வந்தது. தற்சமயத்தில், இப்பொழுது மானம் போகப்போகிறதே, இவ்வாபத்து ஸமயத்தில், தன் ஆரியானா தனக்கு உதவிபுரிவாளென்கிற எண்ணத்துடன் ஸாபினஸ், ஆரியானாவிடம்சென்று, தன்னை இத்துன்பத்தினின்றும்நீக்கும்படிக் கேட்டுக்கொண்டான். அதற்கு அவள் உன் கடனைத் தீர்க்கவும் மீரும்படியான பொருளும் என்னிடத்தில் ரொக்கமாயிருப்பதுமல்லாமல் வருஷாந்தர வரும்படியும், ஏராளமாயிளிக்கின்றது. ஆனால் நீ ஒலிந்தாவை விட்டுவிடுவாயாகில், எல்லாப் பொருளையும் உனக்குத் தருவேன். இல்லாவிடில், ஒரு காசும் கூட கொடுக்கப் போவதில்லை என்று சொன்னாள். இதைக் கேட்டதும் ஸாபினஸுக்கு மயிர் கூச்சலுண்டாயிற்று. அப்பொழுது அவள சி சீ ஆரியானா, உன்னுடைய வார்த்தை என் மனதிற்கு வஜ்ஜிரம் போலிருக்கின்றது. இனிமேல் நீ இவ்வாறு பேசாதே. ஜெயிலில் வீழ்ந்து மானம் போனாலும் போகட்டும். ஜனங்கள் இகழ்ந்தாலும் இகழட்டும், எனக்கு என்ன அவமானம் வரினும் வரட்டும். என ஆயுள் உளள வரையில், நான் என் ஒலிந்தாவை, கைவிடப் போவதுமில்லை. உன் பொருளும் எனக்கு ஆவசியமில்லை. நான் அவளை சகல ஜனங்களுக்கெதிரில் ஸர்வாந்தர ஸாக்ஷியாக பரமாத்துமாவுக்கு வாக்கு தத்தம் பண்ணி விவாஹம் செய்துக்கொண்டேன். அவள் தன் மானத்தை, என் கையில் கொடுத்திருக்கிறாள. என்னுடைய அந்தராத்துமாவானது என்னுடையாளென்று எனனிடம் சொல்லி யிருக்கிறது, என் சுகதுக்கத்திற்குரியவளும், என் சுகத்தின் பொருட்டு தனு, மன, தனத்தை சிலவிட நிச்சயித்திருபபதும் அவள் தான்.

அப்பேர்ப்பட்ட, என் பிரியகரமான, ஜீவனுடைய தேஜோமயமான ரத்னராசியாகிய என் ஒலிந்தாவை உன்னுடைய இவ்வற்ப, சீவனற்ற தாது துண்டங்களுடைய வீணாசையினால், ஒதுக்கவேண்டுமா? ஹர, ஹர, ஆரியானா இவ்வார்த்தையை நீ எவ்வாறு உச்சரிக்கத் துணிந்தனை? போனால் போகட்டும். நான் பேசினதற்காக நீ கோபம் கொளளவேண்டாம். நான் போய் வருகிறேனென்று சொல்லி, அவன் நடக்கலானான்.

தன் எண்ணமெல்லாம் பயனற்றுப் போனதற்காக ஆரியானா மிகவும் துக்கிக்கலானாள்.

(இன்னும் வரும்.) ☞ மங்களாபாய்.

OUR KINDERGARTEN PAGE.

பாலலீலை.

குழலினி தியாழினி தென்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்—திருக்குறள்.

"Objects:—பூனை, எலி. I dea:—பூனை எலிபிடிக்கும்.

1. வா பூனை, வா,
எலி பிடி, வா,
ஓடிவா, ஓடிவா, எலிபிடிக்க.

2. போ, எலி போ,
பூனை பிடிக்கும், போ,
ஓடிப்போ, ஓடிப்போ,
பூனை பிடிக்கும்.

3. பூனை வா, பூனை,
எலி பிடி, வா,
வா வா வா, எலி பிடி வா.

4. எலி ஓடு, எலி,
பூனை பிடிக்கும் ஓடு,
ஓடு ஓடு ஓடு,
பூனை பிடிக்கும்.

[குறிப்பு: இப்பாட்டு குழந்தைகள் கிண்டர்கார்டன் முறைப்படி பாலலீலை செய்வதற் கேற்றதாய், அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் குழந்தைகளுக்கு பூனையையும் எலியையும் பிரத்தியக்ஷமாகக் காட்டியபின்,

"பூனை எலி பிடிக்கும்"

என்னும் உண்மையை தாயார் அல்லது உபாத்தியாயர் அவர்களுக்குணர்த்த வேண்டும். பிறகு ஒரு குழந்தை பூனை மற்றொரு குழந்தை எலியாகவுமிருக்க பாவித்து, மூன்றாவது குழந்தை அல்லது மற்றக்குழந்தைகளெல்லாம் சேர்ந்து இப்பாட்டை வார்த்தைகளின் அருத்தத்துக்குப் பொருந்த அபிநயங்காட்டிப் பாட வேண்டும். "வா பூனை" என்னும்பாட்டை அபிநயத்தோடு பாடிக் கடைசி வரியாகிய "ஓடிவா, ஓடிவா, எலி பிடிக்க" என்பதைச் சொல்லி அபிநயத்தோடழைக்கும் போது பூனையாக விருக்க நியமித்த குழந்தை பூனை எலி பிடிக்க வருவதுபோல் பதுங்கிப் பதுங்கி இலக்குப் பார்த்துக் கொண்டு மெல்லவர ஏற்பாடு செய்ய வேண்டும். உடனே குழந்தைகள் எலியாக யிருக்க நியமித்த குழந்தையைப் பார்த்து "போ எலி, போ" என்று பாடி "ஓடிப்போ, ஓடிப்போ, பூனை பிடிக்கும்" என்று ஆபத்து வந்து விட்டதுபோல் அவசரப்பட்டு அபிநயங்காட்டிச் சொல்லவும் எலியாக விருக்க நியமித்த குழந்தை பதுங்கிப்பூனை வருவதைப் பார்த்துவிட்டு பயந்தோட வேண்டும். அப்பொழுது பூனை" எலி ஓடி விட்டதென்று திரும்ப, குழந்தைகள் மறுபடியும் மூன்றாவது பாட்டைப் பாடி அதைக் கூப்பிடவேண்டும். அதைக் கேட்டு பூனை முன்போல் வர, உடனே எலியைப் பார்த்து ஓடிப் போவென்று நாலாவது பாட்டைப் பாடுவார்கள். அப்பொழுது எலியோட பூனை ஏமாந்துபோம்.

இதனால் குழந்தைகளுக்கு மனக்கிளர்ச்சி யுண்டாகி வார்த்தைகளை உபயோகிப்பதினாலுண்டாகும் பயனையறிந்து புலன் பொறிகளெல்லாம் வார்த்தைகளின் பொருளையும் அதன் முன்பின் தொடர்பையும், கவனிக்கப் பழகுவதால் புத்தி தீக்ஷண்ய முண்டாகும். "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றிருப்பதால்,பாலப்பருவத்திலேயே தங்கள் மனதோடு புலன் பொறிகளெல்லாம் ஒத்து வேலைசெய்யப் பழகின குழந்தைகள் அதே பழக்கம்மேவிட்டு எந்த விஷயத்தையும தீரத்தெளிய உற்று நோக்கி யுண்மை யுணரும் சக்தி வாய்ந்தவர்களாவார்கள். 4-வயது முதல் 7-வயது வரையில் இப்படி புலன் தீக்ஷணியத்துக் காதாரமாக உபயோகிக்கப் பழகின குழந்தை பின் அது கற்குமெல்லாவற்றையும் நுட்பமாக ஆய்ந்து எதையும் "கசடறக் கற்கும்" சக்தி வாய்ந்ததாகும்.]" வி. சி.

☞ உபாத்தியாயர்களுக்காக இனி ஒவ்வொருமாதப் பத்திரிகையிலும் இவ்விதவிஷயம் வரும். உபாத்தியாயர்களும் எழுதியனுப்பினால் மிக நலம். ப. ர்.

புத்தகவரவு.

1911-ம் வருஷத்து

நாஷனல் டைரி.

இந்த டைரி 17 - வருஷ காலமாய் சென்னை ரிப்பன் அச்சாபீஸ் சொந்தக்காரரால் பற்பல உபயோகமான விஷயங்களுடன் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. எல்லா டைரிகளை விட இதில் திதி நக்ஷத்திரம் முதலியவைகள் பிரம்ம ஸ்ரீ தி. எஸ். விஸ்வநாத சிரௌதிகளுடைய கணக்கு திட்டப்படி யிருக்கின்றன. மேலும் சென்ற வருஷத்தில் நடந்த சம்பவங்களும், இனி நடக்கப்போகும் விஷயங்களும் வெகு நன்றாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் 1911ஹு திரியங்கம், கிரஹஸஞ்சாரம், விவாகப் பொருத்தங்கள் முதலியவைகள் இங்கிலீஷ், தமிழ் தெலுங்கு பாஷைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தினத்திற்கு தேதி மாதம் முதலியவைகளுடன் ஒரு பக்க மிருக்கிறது. இச் சிறந்த நாஷனல் டைரி ஒவ்வொரு வரிடத்திலு மிருக்கவேண்டிய தவசியம், பை வைத்தது விலை அணா-6. பையில்லாதது விலை அணா-4.

இந்து சாஸ்திராபிமானி.

இது ஒரு சிறந்த தமிழ்ப்புத்தகம். இதில் எது மெய் என்ற வினா, சம்சாரபந்தம், சோளரகஸ்யம், ஜீவஹானி, அஜாமளன், கலிபுருஷன், சைவ வைஷ்ணவ சம்வாதம், தர்மசிந்தை, கல்வித்திறமை, முயற்சி, ஈசுவர பக்தி, சிநேக வாஞ்சை, இராஜ விசுவாசம், அஷ்டமி வை பவம், இராஜ விசுவாசம், பெண் கல்வி, என்ற விஷயங்கள் வெகு நன்றாகவும் எளிய நடையிலும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் ஒவ்வொருவர் கையிலிருக்கவேண்டிய தவசியமென்று எண்ணுகிறோம். இதன் விலையோ அணா-4. தான். 129 பக்கங்களிருக்கின்றன. வேண்டுவோர் திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக் குறிச்சி. வா. முத்துகிருஷ்ண ஐயருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

LADIES TOILET SPECIALIST.

Chemicals to increase the growth of eyelashess—bleaching and whitening powder for the face and hands.—Hair lengthening and blackening wash—brightening drops for eyes—Internal complexion pills. Fat reducing solution—skin tightener for loose and flabby parts—Rs. 1 each—consultation on every other matters Solicited.

DR. PRABHAKER, Grant Road Bombay (American Graduate).

கல்கட்டா கார்பரேஷன் ஹெல்த் ஆபீஸர் (சுகாதார அதிகாரி) அந்தக் கார்பரேஷனைச் சேர்ந்த ஒரு ஜில்லாவில் ஸ்திரீகளை சானிடரி இன்ஸ்பெக்டர்களாய் நியமித்துப் பார்த்து அப்படி செய்வதில் அனுகூல மிருக்கிறதென்று தெரிந்து கொண்டு இப்போது அந்த கார்பரேஷனைச் சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஸ்திரீ சானிடரி இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதைப் பற்றிய பிரேரேபணைகள் செய்திருக்கிறார்.

சமாச்சாரக் குறிப்பு.

பிரிட்டிஷ் இந்தியாவில் வருஷா வருஷம சுமார் 72-கோடி லெடர்களும், ஒன்பதரை கோடி பத்திரிகைகளும் தபாலில் கொண்டுபோகப்படுகின்றன.

வங்காள மாகாணத்தில் நிருவாகச்சபை ஸ்தாபகத்தால் 1909-ஆம் வருஷத்திய இந்தியன் கௌன்ஸில் ஆக்டுப்படி அரசாட்சி திருத்தத்தின் கொள்கை அதிகப்பயனை அடையும்படி என்னுடைய இந்தியாதேசத்தில் ஏற்பட்டிருக்கிறது என்று நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி சொன்னார்கள்.

பிரின்ஸ் ஆப்வேல்ஸ் பட்டப்பெயர் 1361-ம் வருஷத்தில் உண்டாக்கப்பட்டது. இப்போது பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்ற பட்டம்தரித்த ஜியார்ஜ் அரசரின் மூத்த குமாரருக்குமுன் பதினெட்டு பேர்கள்தான் அப்பட்டத்தை தரித்திருக்கிறார்கள்.

இடாலி தேசத்து ஒரு வைத்தியப் பத்திரிகை, மண்ணெண்ணை பற்றிக்கொண்டால் அதை அவிக்க ஜலம் விடுவதைக் காட்டிலும், பாலை விட்டால், எண்ணையும் பாலும் கலந்து குழம்பாய்ப் போய் விடுவதால், எண்ணை தனியாகப் பிரிந்து எறிய இடமில்லை என்று எழுதுகிறது.

ருஷியாதேசம் முழுவதும் கவுண்ட் லியோ டால்ஸ்டாயின் மரணத்தைக் குறித்துத் துக்கம் பாராட்டுகிறது. அவர் இறந்துபோன இடத்தை ஒரு யாத்திரை ஸ்தலமாக ஏற்கெனவே ஜனங்கள் மதித்துவிட்டார்கள். அவருடைய மனைவியும், புத்திரியும் அருகிலிருந்தார்கள். "உலகத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது என்னைச் சுற்றிக்கொண்டு நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்?" என்பது தான் சீவன் பிரிந்தபோது கடைசியாக அவர் சொன்ன வார்த்தைகளாகும்.

APPROVED BY HIS HIGHNESS THE MAHARAJAH OF JAMMU AND CASHMERE.

கிருஷ்ணமாலதி என்ற கூந்தல்தைலம் ஒரு சிறந்த தைலம். மாதர்களுக்கு மிகவும் முக்கியமானது. குளிர்ச்சியையும், கூந்தல் வளர்ச்சியையுமுண்டாக்கும். காஷ்மீர் மகாராஜாவும் ஜம்மு மகாராஜாவும் இதை ஆமோதித்திருக்கிறார்கள், ஒரு புட்டி விலை 14-அணா. டசன புட்டி விலை ரூ. 6. அ. 12. இங்கிலீஷில் வேண்டுவோர் எழுதவேண்டும்.

PAUL & Co.,
34, Baranosi Ghose's Street, Calcutta.

நேபாளத்து ராஜாவுக்கு மந்திரியா யிருந்த மகாராஜா தேவ் ஷம்ஷேர் ஜங்கின் இரண்டாவது புத்திரியும் அயோததி நாட்டைச் சேர்ந்த காரிகர் ராணியுமாகிய பூபன் அரசி லேடி மிண்டோவை இந்த மாதம் 18-ந் தேதி போய்ப்பார்த்து வெகு நேர்த்தியாய் ஆங்கிலத்தில் அப்பெருமாட்டியோடு பேசிக்கொண்டிருந்ததாகவும், மிண்டோ இந்தியா தாதிச்சங்கத்துக்குச் சேர்க்கும்படியாய் ரூபா 10,000-கொடுத்ததாகவும், சொன்னதாகத் தெரிகிறது. பூபன் அரசி ஆங்கிலத்தில் தங்குதடையின்றி வெகு தெளிவாயும் இனிமையாயும் பேசிய பேச்சையும் அவள் நடந்துகொண்ட மாதிரியையும் பார்த்து லேடி மிண்டோ பிரமித்துப் போனதாய்ச் சொல்லப்படுகிறது.

1885-ம்-ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

எ ச் ச ரி க் கை ! !

நீர்ச்சூலை, யானைக்கால் முதலியவைகளை சொஸ்தப்படுத்தக்கூடிய உலக முழுவதும் பேர்பெற்றவும் விலையுயர்ந்தவுமான எங்களது மருந்துகளில் சிலவற்றை போலிவைத்தியர்கள் சிலர் வீணான உத்தரவாதம் கொடுப்போம், சௌக்கியமடைவீர்களென புளிகிக்கொண்டுவிற்று வருவது எங்களுக்கு தெரிவருகிறது. அவ்வித மருந்துகள் கல்கத்தா 85, பெச்சு சட்டர்ஜி தெரிவிலுள்ள (மருந்துவியாபாரிகளாகிய) B. கோஷ் அண்டு கம்பெனியாருடைய டாக்டர் கோஷின் மருந்துகளல்ல.

எங்கள் மருந்துகள் சிவில் சர்ஜின் டாக்டர் சேம்பர்ஸால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கோஷின் ஆச்சரியகரமான காட்சிப்பொருள்.

நீர்ச்சூலை, யானைக்கால், குடர்ப்பிதுக்கம்,

Varicocle, முதலியவைகளுக்குச் சிறந்த ஔஷதம்.

இந்தமருந்தை வெளியில் பூசினால் வியாதி நாள்பட்டிருந்தாலும் சரி எவ்விதமான வியாதியாயிருந்தாலும் சரி நிச்சயமாய் வியாதியை நீக்கிவிடும், ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2—8. அ.

ஒருபவுன்ட் நிறையுள்ளது ரூ. 30. எங்களுக்கு அநேகர் சிறந்த நற்காட்சி பத்திரங்க ளளித்திருக்கிறார்கள். டாக்டர் சேம்பர்ஸ் ஆதரிப்பவர், நரம்பு தளர்ச்சி, பலவீனம் எவ்விதத்தால் உண்டானபோதிலும் சரி இந்த எண்ணெயை உபயோகித்தால் கிழவர்களும் வாலிபராய் விடுவார்கள். ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2. இதற்கும் நற்சாட்சி பத்திரங்களுண்டு.

பலவீனத்திற்கு டாக்டர் கோஷின் மருந்து.

நரம்பு தளர்ச்சியை உறுதிப்படுத்தத் தக்கமருந்து.

சிலநாள் இந்தமருந்தை உபயோகித்தால் உடனே குணம் தெரியவரும் கண்பார்வை, உண்டாகும். தேகபல முண்டாகும், ஞாபகசக்தியை யுண்டாக்கும், கண்மங்கலை நீக்கும், நாட்பட்ட மேகவெட்டை, சுளுக்கு, சளி, கோழை மூத்திரவியாதிகள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும், ஒரு புட்டி விலை ரூ. 1. அ. 8.

டாக்டர் கோஷின் உலகபிரசித்திபெற்ற நன்னாரிவேர் சர்பத்து (Sarasaparilla) ஒருபுட்டி விலை ரூ. 1.

விநோதமான மோதிரங்கள்.

ரசாயன சாஸ்திரப்பிரகாரம் செய்யப்பட்டவைகள், இடதுகையில் எந்தவிரலில் போட்டுக்கொண்டாலும் வியாதியுள்ளவர்கள் வியாதியின்றி சுகமாயும், சந்தோஷமாயும், சுத்த இரத்தத்துடனு மிருப்பார்கள், ஒரு மோதிரம் விலை ரூ. 1—8—0. டசன் ரூ. 12.

மேற்கூறிய மருந்துகளும் மோதிரமும் வேண்டியவர்கள் இங்கிலீஷில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. GHOSE & CO,

CHEMISTS, (MODHOOR NEEKATUM)

85-1 Bechoo Chatterjee's Street, Calcutta.

ஜார்ஜ் அரசரும் அவர் மனைவியாகிய மேரியும் அடிக்கடி சற்றுப்பிரயாணம்செய்து அபூர்வமான இடங்களைப் போய்ப் பார்த்து வருவதுண்டு.

லண்டனில் ஒரு போஸ்டாபீஸில் ஒரு நூதனமான யந்திரம் வைக்கப்பட்டிருக்கின்றது. தபால் தலைகளை தானாகவே ஒட்டிவிடும். ஒரு காலணு அந்த மெஷின்மேல் வைத்தால் ஒரு ஸ்டாம்பை வெளியே கொண்டுவந்து அந்த தபால் மேல் ஒட்டிவிடும். ஒரு மணிக்கு 2000 முதல் 3000 வரைக்கும் லெட்டர்களுக்குத் தலையொட்டும். ஒவ்வொரு யந்திரமும் 50, 000 ஸ்டாம்புகள் கொள்ளும். நல்ல காசுகளைத்தான் அந்த மெஷின் வாங்கிக்கொள்ளும்படி அதில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளைந்து தேய்ந்த காசுகளாகட்டும் அன்னிய தேசத்துக் காசுகளாகட்டும் அந்த யந்திரத்தில் வைக்கப்பட்டால் அந்த யந்திரம் அவைகளைக் கீழே தள்ளிவிடும்.

காசு வைத்தால் தபால் தலை கொடுக்கும்படியான யந்திரங்கள் பம்பாயில் வைக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டு வருகிறதென்று தெரிகிறது. இதனால் ஜனங்களுக்கு அனுகூல முண்டாகிறதென்று தெரியவந்தால் அந்த யந்திரங்கள் இந்தியாவிலுள்ள முக்கியமான தபாலாபீஸ்களில் உபயோகப்படுத்தப் படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயிலுள்ள யந்திரங்களில் ஸ்டாம்புகள் ஒட்டும் ஏற்பாடு வைக்கப்படவில்லை.

வியாதி நீங்காது வருந்துவோருக்கு கைகண்ட மருந்து.

எளிதில் சொஸ்தப்படுத்துகிறது.

அடியிற்கண்ட சொஸ்தமாகாத வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்களை உடனே சொஸ்தப்படுத்தும். அநேக பேர்பெற்ற டாக்டர்களால் இம்மருந்து பரிசோதிக்கப்பட்டு அடியில் வரும் வியாதிகளுக்கு இது நல்லமருந்தென்று நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவிதசுரம், மலேரியா சுரம், நீண்டமண்ணீரல், பித்தாசயம், மகோதரவியாதி, பிளவை, மேகவெட்டை, கிரந்திப்புண், நீர்ரோகம், வாதம், இரத்தரோகம், முதலியவைகளை இந்த மருந்து சொஸ்தப்படுத்திவருகிறது.

Arayn Sarasaparilla.

ஆரியன்சரசபரிலா என்ற நன்னாரிவேர் சர்பத்து பலவினர்களுக்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கும்.

Medicateel Scentd Hair Oil.

மருந்துவகை சேர்ந்த வாசனைபொருந்திய கூந்தல் தைலம். வழுக்கைத் தலைக்கும், மயிர் வளரவும் உதவும். முகப்பருவு முதலியவைகளுக்கு வாசனையுள்ளமருந்தும் கிடைக்கும். இவைகளுக்கு சார்ஜ் நடுத்தரமானது, பொது ஜனங்கள் ஒருதடவை முயற்சி செய்யலாம், ஆர்டர் அனுப்பினால் உடனே சாக்கிரதையாக மருந்துகள் அனுப்பப்படும். இங்கிலீஷில் எழுதவேண்டும்.

Apply To:—The Manager. GANGULY FRIENDS & Co.
271, Sham Bazaar Street, Bagh Bazaar P. O., Calcutta.

சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத் தடுப்பது நலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத்தாங்குவது கஷ்டம்

SCOTT'S EMULSION.

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்தநரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்,

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது,

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளாம்.
ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து,

வெனிஸ் நகரத்தில் ஒரு கண்ணாடிச் சாலையில் கண்ணாடியை உருக்கி வார்த்து வெகு ஸன்னமாய்ப் பரப்பி துணிபோல் செய்கிறார்கள். உயர்ந்த பட்டுபோல் மினுமினுப்பும் பகட்டும் பளபளப்பான வர்ணமும் இதில் காணப்படுவதால், உயர்ந்த தொப்பிகளில் இதையே பட்டுக்குப் பதிலாய் உபயோகிக்கிறார்கள். ஆதலால் அக்கண்ணாடிச் சாலைக்காரர்கள் வெகு அபாரமான வியாபாரம் நடத்திவருகிறார்கள்.

விஜயநகரம் ராஜாவும் ராணியும் தங்கள் இரண்டு குமாரர்களுடன் லார்ட் ஹார்டிஞ்சையும் லேடி ஹார்டிஞ்சையும் போய்பார்த்துப்போன டிசம்பர்மீ 20உ பேசிக்கொண்டிருந்தார்கள். விஜயநகரம் ராணி லேடி ஹார்டிஞ்சிடம் பேசிக்கொண்டிருந்த பேச்சு சிறிது விசேஷமுடையதா யிருந்ததென்று காண்கிறது. முடிசூட்டு தர்பாருக்கு மாட்சிமை பொருந்திய மேரி அரசி (Queen Mary) வந்திருக்கும்போது, அப்பெருமாட்டி இந்திய உயர் குடும்பங்களைச்சேர்ந்த இந்திய மாதர்கள் சிலரைத் தம்முடைய சிப்பந்திகளாய் எடுத்துக்கொள்ள இசைவதாயிருந்தால் அச்சிப்பந்திகளில் ஒருத்தியாயிருக்கும் கௌரவத்துக்குத் தமது பேரை அப்பெருமாட்டியிடம் தாக்கல்செய்ய வேண்டுமென்று விஜயநகரம் ராணி லேடி ஹார்டிஞ்சிடம் தெரிவித்துகொண்டார். லேடி ஹார்டிஞ்சும் அவ்விஷயத்தை மாட்சிமை பொருந்திய மேரி அரசியாருக்குத் தெரிவித்து, அதற்குக்கிடைக்கும் பதிலை விஜயநகரம் ராணிக்குத் தெரிவிப்பதாய்ச சொன்னார்கள்.

நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தியார் பேசியது:—தம்முடைய தகப்பனார் இறந்த பெரிய துக்ககரமான சமபவத்திற்குப் பிறகு முதல் முதல் பார்லிமெண்டில் பேச நேரிட்டசமயம் இதுதான் என்று சக்கரவர்த்தி சொன்னார். ஆனாலும் அநேக தேசங்களிலிருந்துவந்த அனுதாபச் செய்திகள் தம்முடைய துக்கத்துக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்திருக்கின்றன என்றுசொன்னார். தம்முடைய தகப்பனார் சென்ற காலடிச்சுவட்டைப் பின்பற்றிச்செல்ல வேண்டுமென்னும் உண்மை விருப்பத்துடன், செய்யவேண்டிய கடமையைச் செய்வதிலேயே தாம் பிரவர்த்தித்திருப்பதாகச் சக்கரவர்த்தி சொன்னார். அந்நிய நாட்டாருடன் நமக்கிருக்கும் சம்பந்தம் சிநேக பாவமான சம்பந்தமாகவே இருந்து வருகிறது. வட அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் மீன்பிடிக்கும் விஷயமாய் ஏற்பட்டிருந்த கடினமானதும், சன்னல் பின்னலானதுமான பிரசினைகள் மத்தியஸ்தக் கோர்ட்டினால் சுலபமாக முடிவுக்கு வந்துவிட்ட விஷயமாய் விசேஷ திருப்தியுண்டாகக் காரண மிருக்கிறதென்றார். தென்னாப்பிரிக்காவில் கானாட்டுக்கோமகன் திறந்த புதுப்பார்லிமெண்டினால் தென்னாப்பிரிக்காவின் அபிவிருத்தி வளர்ந்தோங்குமெனும் உண்மையான நம்பிக்கையோடுகூடித் தாமிருப்பதாகச் சொன்னார். வங்காளத்தில் நிருவாகச்சபை அமைப்பைப்பற்றிப் பேசினார். கடற்படை மதிப்புத்தொகையை அதிகப்படுத்தி யிருப்பதிலும், வயதானவர்களுக்குப் பென்ஷன் தொகையை அதிகப்படுத்தியிருப்பதிலும் தமக்கு மிகுந்த திருப்தி என்றார். பார்லிமெண்டு சபைகளில (காமன்ஸ் சபையும் லார்ட்ஸ் சபையும்) அடிக்கடி உண்டாகும் கஷ்டங்களை நிவர்த்திக்கும்படி கூடின கான்பரன்ஸ் ஒருவித முடிவுக்கு வராமல் தவறிவிட்டதுபற்றித் தாம்மிகவும் விசனிப்பதாகச் சொன்னார். ரீஜென்ஸி மசோதாவும், டிக்லரேஷன்மசோதாவும், நிறைவேறியதைப்பற்றித் தமக்குண்டான சந்தோஷத்தை வெளியிட்டார்.

சென்ற 200-வருஷங்களாக ஜாம்நகர் மகாராஜா அரண்மனையின் பரம்பரை வைத்தியப் பண்டிதர்களின் குடும்பத்தில் உதித்தவர்.

வைத்தியருக்கு ஏன் வீணாகப் பணம் கொடுக்கிறீர்கள்.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற எங்களுடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்.

வாங்கி உபயோகியுங்கள் இந்த மாத்திரைகள் தங்கம் போன்றவை.

ஆண் பெண் இருபாலரும் வியாதியிருந்தாலும் வியாதியில்லாது போனாலும் வாங்கிப்புசிக்கலாம். தேகத்துக்குப் பலமும் நரம்புகளுக்கு வீரியமும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த ஒளஷதம் வேறில்லை.

இவை சிறிதாகவும் ருசியாகவும் இலகுவில் சாப்பிடக்கூடியவையும் ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை யாதொரு பத்தியமு மில்லாமல் குமரர் முதல் கிழவர் வரை யாராவலும சரியே, எக்காலத்திலும் எத்தேசத்திலும் சாப்பிடலாம்.

இவை (1) இரத்தத்தை சுத்திசெய்து, அதிகப்படுத்தும்.
(2) சகல விதமான நரம்புத் தளர்ச்சியையும் நீக்கி மூளையை குளிர்ச்சி யடையச் செய்து ஞாபகசக்தியை பலப்படுத்தும், மூத்திர சம்பந்தமான சகல வித நோய்களையும் பறக்கடிக்கும்.
(3) உடம்பைச் சௌக்கியமும் பருமனும் அடையச்செய்யும்.
(4) புருஷத்துவத்தையும் வாலிபப்பருவத்தையும் கொடுக்கும்.
(5) வயிறு சம்பந்தமான சகல நோய்களையும் போக்கி கஷ்டமில்லாமல் மலத்தை வெளிப்படுத்தும்.
(6) கிழப்பருவம் வராதபடி காத்து, இழந்துப்போன வாலிபத்தை கொடுக்கும்.
(7) மேகம், மது மேகம், பித்தக்கூடு முதலிய சகல கொடிய நோய்களையும் வேருடன் போக்கும்.
(8) ஜனனேந்திரியங்களுக்குப் பலத்தையும் வலுவையும் கொடுக்கும்.

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டின் விலை ரூ 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் இன்னும் எங்களிடமுள்ள சிலாக்கியமான வேறே மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும், ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜாராத்தி, இந்தி, பெங்காளி, மராட்டி, இந்துஸ்தானி, முதலிய எந்தப்பாஷையில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனாமாக நாங்களே வேபில் ஒட்டியனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

☞ ஜாம்நகர் மகாராஜா எமது மருந்துகளைக் குறித்து முதல்திற நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனாரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்திற சர்டிபிகேட்டும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

☞ ராஜவைத்திய் நாராயணஜி கேசவஜி,
புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா,
No 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

லார்ட் ஹார்டிஞ்ஜ்.

H. E. THE RIGHT HON'BLE HARDINGE OF PENSHURST,
P. C., G. C. M. G., K. C. M. G., G. C. V. O., K. C. V. O.,
C. B., C. V. O., G. G. S. I., G. C. I. E.,
VICEROY AND GOVERNOR-GENERAL OF INDIA.